விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 305 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 02 சனிக்கிழமை (19.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




பல கட்சிகள் அழைப்பு விடுத்தன

## அறவழியில் பயணிக்கவுள்ளதால் சுயேட்சையாகக் களமிறங்கினேன்

### சட்டத்தரணி ஈ.எஸ்.பி.கமலரூபன்



(யாழ்ப்பாணம்)

பல கட்சிகள் எனக்கு ஆசனம் வழங்கத் தயாராக இருந்தன. ஆனால் எனது அரசியல் பயணம் அறவழியாக இருக்க வேண்டும் என்பதால்தான் சுயேட்சையாக இறங்கியுள்ளேன் என யாழ்.தேர்தல் மாவட் 15

## ரணிலின் சேவை மீண்டும் நாட்டுக்குத் தேவைப்படலாம்

### ஐக்கிய தேசியக் கட்சி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சேவை இந்த நாட்டுக்கு மீண்டும் தேவைப்படலாம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

"நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது தனியொரு 15

## சங்குப்பிட்டி பாலத்தால் பயணிக்க

### 3 நாட்களுக்கு தடை விதிப்பு

3ஆம் பக்கம் பார்க்க

## கரணவாயில் சடலம் மீட்பு

(கரணவாய்)

கரணவாய் மத்தியில் பெண்ணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

தனிமையில் வசித்த 79 வயது வயோதிப மாதுவே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை 15

# வன்னி மாவட்டத்தின் வாக்களிப்பு நடவடிக்கையை ஒத்திவைக்குக

## உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல்

(யாழ்ப்பாணம்)

**பாராளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தின் வாக்களிப்பு நடவடிக்கைகளை ஒத்திவைக்குமாறு கோரி ஜனநாயகத் தேசியக் கூட்டணியால் உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்காக வன்னி தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயகத் தேசியக் கூட்டணி தாக்கல் செய்த வேட்புமனுவை நிராகரிப்பதற்கு மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி மேற்கொண்ட தீர்மானத்தை வலுவற்றதாக்கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரியே உயர்நீதிமன்றத்தில் இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனநாயகத் தேசியக் கூட்டணி கட்சியைச் சேர்ந்த வன்னி மாவட்ட வேட்பாளர் ப.உதயராசா மற்றும் மூவரால் சட்டத்தரணி சனத் விஜேவர்தனவின் ஊடாக இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், வன்னி மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரி உள்ளிட்ட சிலர் இந்த மனுவின் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

தாம் வன்னி மாவட்டத்துக்காக மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரியிடம் வேட்புமனுவைக் கையளித்தனர் என்று மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அந்தச் சந்தர்ப்பத்தில் குறித்த வேட்புமனு முறையாக முன்வைக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டு அதனை ஏற்றுக்கொள்வதை அவர் நிராகரித்தார் என்றும் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அனைத்து ஆவணங்களும் முறை 15

யாழ்.போதனாவில்

## 45 நாட்களேயான குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் 45 நாட்களேயான பெண்குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

கொடிகாமத்தைச் சேர்ந்த துசியந்தன் தனுசியா என்ற குழந்தையே உயிரிழந்ததாகும். 02

ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

## செவிடாகவும் குருடாகவும் அரசாங்கம் செயற்படுகின்றது



### நாமல் ராஜபக்ஷ சாடல்

(கொழும்பு)

2019 ஈஸ்டர் ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை வெளி 15

அனலைதீவு ஐயனார் ஆலயத்தில்

## மின்சாரம் தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - அனலைதீவு ஐயனார் ஆலயத்தில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் அனலைதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நடராசா துசியந்தன் (வயது - 37) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அனலைதீவில் 15

கைதடி மேற்கில்

## கிணற்றுக்குள் விழுந்த இளைஞன் உயிரிழப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடி மேற்கில் கிணற்றுக்குள் விழுந்து 22 வயதான இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை மதியம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இளைஞனுடைய சடலம் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத் 15

## செலவு அறிக்கை சமர்ப்பிக்காவிட்டால் தேர்தல் உரிமையை இழக்க நேரிடும்

### பெப்ரல் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தல் நிறைவடைந்த பின்னர், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களது செலவு அறிக்கையைச் சமர்ப்பிக்கத் தவறினால் அவர்கள் மூன்று ஆண்டுகளுக்குத் தேர்தல் உரிமையை இழக்க நேரிடும் என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பெப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி இந்த விடயத்தைக் குறிப்பிட் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

**198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)
**077 138 7596, 071 999 9306**

(2337)


# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினராக வைத்திய நிபுணர் ரவிராஜ் தெரிவு



யாழ். போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணரும், யாழ். பல்கலைக்கழக முன்னை நாள் மருத்துவபீட பீடாதிபதியும், பேராசிரியருமான, வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் ரவிராஜ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ம-7)


## வேலைவாய்ப்பு

உரும்பிராயில் அமைந்துள்ள சுப்பர்மாக்கட் ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர்கள் தேவை.

- கடை வேலை : பொருட்கள் கட்டிக் கொடுப்பதற்கு ஆண்/ பெண் - வயதெல்லை : (20-30)
- கூலி(நாட்டாமை) : ஆண் (வயது : 35 - 45)
- Driver (சாரதி): வயது (30-60)

(447)

**ஹப்பி சுப்பர்மாக்கட் - உரும்பிராய்**
**076 422 1761**


## ..45 நாட்...

குழந்தைக்கு சளி ஏற்பட்டதன் காரணமாக கடந்த 14 ஆம் திகதி சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை(17) யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு மாலை சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்துள்ளது.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். குழந்தையின் மாதிரிகள் இரசாயனப் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-7,60)


## இணுவில் சிவபூமி அபயம் இலவச சிகிச்சை நிலையம்

### திறப்புவிழா

(இணுவில் அமரர்.முதலியார் செல்லத்துரை, கனகசபாபதி ஆனந்தராஜா நினைவாக வழங்கப்பெற்ற இல்லம்)

**காலம்**
19.10.2024 சனிக்கிழமை காலை 9.00மணி

**தலைவர்**
செஞ்சொற்செல்வர். கலாநிதி.ஆறு.திருமுருகன்
(தலைவர் சிவபூமி அறக்கட்டளை)

**ஆசியுரை**
ஆன்மீகச்சுடர். ரிஷி. தொண்டுநாதன் சுவாமிகள்

**விருந்தினர்கள்**
வைத்தியநிபுணர், கந்தப்பிள்ளை பார்த்தீபன் அவர்கள்
(தலைவர்- அபயம் அறக்கட்டளை)
திரு.வி.யோகநாதன் அவர்கள்
(தொழிலதிபர் -லண்டன்)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

(2343)

அபயம் அறக்கட்டளை
லண்டன்

நிர்வாக சபை
சிவபூமி அறக்கட்டளை
இலங்கை



## பராமரிப்பாளர் தேவை

வவுனியா செட்டிகுளம் அண்டிய பகுதியில் உள்ள தென்னந்தோப்பினை தங்கி நின்று பராமரிப்பதற்கு பராமரிப்பாளர் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :
**077 811 8948**

(C-1418)



## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடியில் 30 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. A9 வீதி முகப்புடன்

- 20 அடிப் பாதை
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம் காலை 6.00- மாலை 6.00
- தரகர் தேவையில்லை

(2351)

**070 168 3354**
**070 668 3354**



## மில் வேலைக்கு ஆட்கள் தேவை

சம்பளம் 2500/= இற்கு மேல் (ஆண், பெண் இருபாலாரும்)
பழக விரும்புவோரும் அழைக்கலாம்.

(446)

**077 936 1356**



# ANNIVERSARY DAY CELEBRATION

## வீனஸ் விசேட வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்ட பொன்னான நினைவு நாள்




அன்றிலிருந்து தனது நிறைவான மருத்துவ சேவையை வழங்கிட உறுதுணையாய் இருந்த மதிப்புக்குரிய வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் மற்றும் வைத்திய சேவை பணியாளர்கள் அனைவருக்கும் இந்த பொன்னான நாளில் நன்றி தெரிவிக்கின்றோம்.

நாடி வரும் நோயாளர்கட்கு நிறைவான சேவையை வழங்க வீனஸ் விசேட வைத்தியசாலை 24 மணி நேரமும் தயார் நிலையில் உள்ளது என்பதை பெருமையுடன் அறியத்தருகின்றோம்.

இந்நன்நாளில் எமது மருத்துவமனையில் உயிர்காக்கும் உன்னத தானமாகிய இரத்ததானம் எமது வைத்தியசாலை பணியாளர்களால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்படும்.

### இந் நிகழ்வை சிறப்பிக்கும் முகமாக

- பிள்ளையார் பூஜை
- விளக்கேற்றல்
- கொடியேற்றல்
- இரத்ததான முகாம்

### இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக

இளைப்பாறிய மாவட்ட நீதிபதியும், இலங்கை சத்தியசாயி நிறுவனங்களின் பிரதி இணைப்பாளருமான **திரு.சு.வசந்தசேனன்** அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.
இந்நிகழ்வுகள் அனைத்தும் இறைவழிபாட்டுடன் ஆரம்பமாகி எமது வைத்தியசாலை பணிப்பாளர் தலைமையில் நடைபெறும்.

எமக்கு பல வருடங்களாக பேராதரவினை தரும் எமது வாடிக்கையாளரின் நலன் கருதி 19.10.2024 அன்று எமதுவைத்தியசாலையின் OPD, சனலிங் பிரிவுகளில் சிகிச்சை பெறுபவர்களிற்கு எமது வைத்தியசாலைக் கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டது என்பதனைத் தெரியப்படுத்துகின்றோம்.

(சனலிங்கிற்கு வருபவர்கள் வைத்திய நிபுணரது கட்டணத்தை மட்டும் செலுத்தி சேவையை பெற்றுக் கொள்ளலாம்.)

மேலும் சில சலுகைகளை வீனஸ் வைத்தியசாலை வழங்கவுள்ளது என்பதனையும் அதற்கான விபரங்களை எமது Facebook தளத்தில் பார்வையிட்டு அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

(C-1415)

**Facebook ID - Venus Speciality Hospital (pvt) Ltd**
**136, Palaly Road, Kantharmadam, Jaffna.**
021 222 8470, 021 222 8475, 070 513 6136
venushos136@gmail.com



# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
15.11.1950

மறைவு
30.10.2023

## பாலசிங்கம் வெற்றிவேல்

(ஓய்வுபெற்ற அதிபர்)

**திதி : 19.10.2024**

கண்மூடித் திறப்பதற்குள்
ஆண்டொன்று கடந்து போச்சு அப்பா
மண்மீதில் நீங்களில்லா நாழிகைகள்
துயரமாச்சு அப்பா
கண்போல எம்மை காத்து நின்ற
ஆளுமைப் பேரொளியே
பண்படுத்தி எங்களை பாரினில்
நிமிரச் செய்த தெய்வமே
வெண்மை மனம்கொண்ட
வெற்றிவேல் என்னும் பெறுமதியே
உண்மை மனங்களில்
உயர்வாய் நிமிர்கின்ற முழுமதியே
எப்போதும் போல எங்களை வழிநடத்துங்கள்
ஒப்பேதுமில்லா பெருந்தவமே.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

"...ரதி மஹால்"
அல்வாய்.

(440)

**குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்குப்பிட்டி பாலத்தால் பயணிப்போர் கவனத்திற்கு!

(யாழ்ப்பாணம்)

**கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பு காரணமாக அவசர திருத்த வேலைகள் நடைபெறவுள்ளதால் போக்குவரத்து தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளது.**

நேற்று மு.ப 12.00 மணியிலிருந்து 03 நாட்களுக்கு இப் பாலத்தினூடாக கனரக வாகனங்களின் போக்குவரத்திற்கு தடைசெய்யப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் அறிவித்துள்ளார்கள்.



இதேவேளை இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் சிற்றூர்தி சேவையில் பயணிக்கும் பயணிகள் மாத்திரம் பயணித்து சில இடங்களில் இறங்கி நடந்து செல்ல வேண்டிய தேவைப்பாடு உள்ளதாகவும், மேலும் வைத்தியசாலைக்கு செல்ல வேண்டி நோயாளர்களுக்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் அறியத்தந்துள்ளார்.

மேலும், கனகர வாகனங்கள் போக்குவரத்திற்கு தடை செய்யப்பட்டுள்ளதால் மாற்றுப் பாதையினை பயன்படுத்துமாறும், பாதைக்கான திருத்த வேலைகள் விரைவாக பூர்த்தி செய்யப்படும் பட்சத்தில் குறித்த தினத்திற்கு முன்னர் பயன்பாட்டுக்கு அனுமதிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.(நி-8-33-285-316)

## மாவட்டங்களுக்கு இடையே

# பன்றிகளை இறைச்சிக்காக கொண்டு செல்லத்தடை

(கொழும்பு)

பன்றிகளை இறைச்சிக்காக மாவட்டங்களுக்கு இடையில் கொண்டு செல்வதனை உடனடியாக நிறுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பன்றிகளுக்குப் பரவிவரும் வைரஸ் தொற்று காரணமாக இந்த அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கால்நடைகள் உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், கலாநிதி ஹேமலி கொத்தலாவல ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேல், வடமேல் உள்ளிட்ட பல்வேறு மாகாணங்களில் இந்த வைரஸ் பரவி வருவதாகவும் அதனைக் கட்டுப்படுத்துவதற்குக் கால்நடை உத்தியோகத்தர்கள் பண்ணையாளர்களுக்கு உதவிகளை வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

# சங்கிற்கு ஆதரவு

## வியாழேந்திரன் அதிரடி

(மட்டக்களப்பு)



ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணிக்கு இம்முறை தாம் ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளதாக முற்போக்கு தமிழர் கழகத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சதாசிவம் வியாழேந்திரன் அறிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக இந்தத் தீர்மானத்தினை எடுத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-8)

# 750,000 அஞ்சல் மூல விண்ணப்பங்கள்

## தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்காக 750,000 அஞ்சல் மூல விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

பொதுத் தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிப்பவர்களுக்கான வாக்காளர் பட்டியல் அத் தாட்சிப்படுத்தல் நடவடிக்கை கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

அத்துடன் அஞ்சல் மூல வாக்குச் சீட்டுகள் எதிர்வரும் 23ஆம் திகதி அஞ்சலிடல் பணிகளுக்காகக் கையளிக்கப்படவுள்ளன.

இதேவேளை, எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு 5 நாட்கள் இடம்பெறவுள்ளன.


இதன்படி பொதுத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு மாவட்ட செயலகங்கள், தேர்தல் அலுவலகங்கள், காவல் நிலையங்களில் இந்த மாதம் 30ஆம் திகதியும் அடுத்த மாதம் 4 ஆம் திகதியும் இடம்பெற வுள்ளன.

அத்துடன் ஏனைய அரச நிறுவனங்களிலும் இராணுவ முகாம்களிலும் அடுத்த மாதம் முதலாம் திகதியும் 4 ஆம் திகதியும் அஞ்சல் மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.

குறித்த தினங்களில் வாக் களிக்க முடியாதவர்களுக்காக அடுத்த மாதம் 7ஆம், 8ஆம் திகதிகளில் வாக்களிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. (நி-8)

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு புதிய தலைவர்

(கொழும்பு)



இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவராக சிரேஷ்ட பேராசிரியர் கபில செனவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க அண்மையில் அந்தப் பதவியில் இருந்து விலகியதை அடுத்து அவர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார். (நி-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி கிருபாகரன் சறோஜினிதேவி



இளவாலை வடக்கு இளவாலையைச் சேர்ந்த திருமதி கிருபாகரன் சறோஜினிதேவி அவர்கள் 18.10.2024 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பு (மலாயன் பென்சனியர்)- சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு (HNB) - இராஜேஸ்வரி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற கிருபாகரனின் (பெருந்தோட்டத்துறை அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் கங்காதேவி, காலஞ்சென்ற Dr.கணேசலிங்கம் (இளைப்பாறிய வைத்திய அதிகாரி), குமாரலிங்கம் (இளைப்பாறிய மின்அத்தியட்சகர் CEB , JP) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தி.நாகேஸ்வரன் (ஓய்வு நிலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர்), காலஞ்சென்ற மகேஸ்வரதேவி, கமலாதேவி, சந்திராதேவி, சிவசுந்தரம் (இளைப்பாறிய M.P.C.S உத்தியோகத்தர் தெல்லிப்பழை), ருக்குமணிதேவி (இளைப்பாறிய பிரதேச சபை உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 20.10.2024 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்தில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இளவாலை வடக்கு,
இளவாலை.

(2352)

தகவல் :
குடும்பத்தினர்

# மே.இ தீவுகளை வீழ்த்தி தொடரை வென்ற இலங்கை




மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான மூன்றாவதும் இறுதியுமான ரி20 போட்டியில் இலங்கை அணி 9 விக் கெட்டுக்களால் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

தம்புள்ளையில் இடம்பெற்ற இந்த போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அந்த அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களை பெற்றது.

இதன்படி 163 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 18 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டினை மாத்திரம் இழந்த நிலையில் வெற்றி இலக்கை அடைந்தது.

இதற்கமைய மூன்று போட்டிகள் கொண்ட இந்த ரி20 தொடரை இலங்கை அணி 1:2 என்ற அடிப்படையில் கைப்பற்றியதுடன் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக இலங்கை அணி கைப்பற்றியுள்ள முதலாவது ரி20 தொடரும் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (6-8)




# யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

## நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் -2024.10.19

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி A/L - 2022 பிரிவு
பல்கலைக்கழகத்திற்கு தெரிவானவர்கள்





டபர்கோல் நாடகப் போட்டி
சிறந்த துணை நடிகர் விருது
செல்வன் ஞா.ஜதுசன்

க.பொ.த(சாதாரணதரம்) - 2022



N.ரம்யா 8AB



A.டக்சனன் 8AC

க.பொ.த(உயர்தரம்) - 2023



க.பொ.த(சாதாரணதரம்) - 2023



S.மிதுஷா 8AB
T.ராகவி 8AC
V.யனோசிகா 8AC

தரம் – 05 புலமைப்பரிசில் பரீட்சை
சாதனையாளர்கள் – 2023






அகில இலங்கை கர்நாடக சங்கீதப் போட்டி
இசைநாடகப் பாடல் – 2023 தேசியமட்டம் – 1ம் இடம்



கைப்பந்து 17 வயதுப்பிரிவு
மாகாண மட்டம் 2ம் இடம்



கரம் 17 வயதுப்பிரிவு ஆண்கள்
மாகாண மட்டம் 3ம் இடம்




அகில இலங்கைத் தமிழ்மொழித் தினப்போட்டி
நாட்டிய நாடகம் – 2024 வலயமட்டம் – 1ம் இடம்
மாகாணமட்டம் – 3ம் இடம்

– கல்லூரிச்சமூகம்

(2350)


# வெளியேறியது ஆஸி; பைனலில் தென்னாபிரிக்கா




"ரி20" உலக கோப்பை அரையிறுதிப் போட்டியில் 2 விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி பைனலுக்கு தென்னாபிரிக்கா முன்னேறியது.

ஐக்கிய அரபு எமிரேட்சில் பெண்களுக்கான ஐ.சி.சி. "ரி20" உலக கோப்பை 9 ஆவது சீசன் நடக்கிறது.

டுபாயில் நடந்த முதல் அரையிறுதியில் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா அணிகள் மோதின.

டாஸ் வென்ற தென்னாபிரிக்கா பீல்டிங் தேர்வு செய்தது. அவுஸ்திரேலிய அணிக்கு பெத் மூனே (44), கப்டன் தஹ்லியா மெக்ராத் (27), எல்லிஸ் பெர்ரி (23) கைகொடுக்க, 20 ஓவரில் 5 விக் கெட்டுக்கு 134 ரன் எடுத்தது. லிட்ச்பீல்டு (16) அவுட்டாகாமல் இருந்தார்.

சுலப இலக்கை விரட்டிய தென்னாபிரிக்க அணி 17.2 ஓவரில் 2 விக்கெட்டுக்கு 135 ரன் எடுத்து வெற்றி பெற்று, பைனலுக்குள் நுழைந்தது.

கடந்த ஆண்டு பைனலில் அவுஸ்திரேலியாவிடம் சந்தித்த தோல்விக்கு பதிலடி கொடுத்தது.




தவிர, பெண்கள் "ரி20" உலக கோப்பை அரங்கில் முதன் முறையாக அவுஸ்திரேலியாவை தென்னாபிரிக்க வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுக்கரை குள பெரும்போகம் முன்னெடுக்கப்பட்ட தீர்மானங்கள்

(மன்னார்)

மன்னார் கட்டுக்கரைக் குளத்தின் கீழ் வருகின்ற வயல் நிலங்களுக்கான பெரும்போகப் பயிர்ச் செய் கைக்கான 2024-2025 கூட்டம் நேற்று வெள்ளிக் கிழமை உயிலங்குளத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இவ்வருடம் 31 ஆயிரத்து 339 ஏக்கர் நிலம் பெரும்போக நெற்செய்கைக்காகப் பயன் படுத்தப்படவுள்ளது.

அதற்கு அமைவாக இவ் வருட பெரும்போக விவசாயத் தயார்படுத்தலுக்காக எதிர்வரும் 27 ஆம் திகதி முதலாவது நீர் விநியோகம் செய்யப்பட உள்ளது.

விதைப்பு இறுதித் திகதி யாக 4.11.2024 ஆம் திகதிக்கு அறி விக்கப்பட்டுள்ளது.

4 1/2 மாத நெற்களுக்கு விதைப்பினை 7.11.2024 ஆம் திகதிக்கு முன்பாகவும் 3 தொடக் கம் 3 1/2 மாத நெல் லினங்கள் 26.11.2024 இற்கு முன்பாகவும் 2 1/2 மாத நெல்லினத்தை விதைக்க விரும்புபவர்கள் 26.11. 2024 இற்கு முன்பாகவும் விதைப்பை மேற்கொள்ளுமாறு அறிவுறுத் தல் வழங்கப்பட் டுள்ளது.

மேலும் 27.11.2024 தொடக் கம் கட்டுக்கரை குளத்தின் கீழ் விவசாயம் செய்வோர் தேவைப்ப டுகிறவர்களுக்கு நீர் விநியோகம் செய்ய தீர் மானிக்கப்பட்டுள்ளது.

அதே போன்று அறுவடை 11.3.2025 ஆண்டு ஆரம் பிக் கப்பட வேண்டும். மற்றும் பெரும் போக நெற்செய் கையை கருத் தில் கொண்டு கால் நடைகளை கட்டுப்படுத்த வும் அத்துமீறி விவசாய நடவடிக்கை களை மேற் கொள்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்ப டும் போன்ற தீர் மானங்கள் எடுக்கப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. (6-8-285)

## பல அரசாங்க வைத்தியசாலைகளில் கதிரியக்க பரிசோதனைகள் முடக்கம்

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலை யில் காணப்படுகின்ற மருத்துவ சேவை உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையால் இலங்கையில் 8 இற்கும் மேற்பட்ட வைத் தியசாலைகளில் கதிரியக்க பரிசோதனை சேவைகள் தடைப் பட்டுள்ளதாக சுகாதார தொழிற் சங்க கூட்டமைப்பு தெரிவித்து ள்ளது.

கடந்த அரசாங்கத்தில் துணை மருத்துவ சேவைக்கு தேவையான உத்தியோகத்தர் களை ஆட்சேர்ப்பு செய்வது இடைநிறுத்தப்பட்டதன் காரண மாக CT ஸ்கானர் மற்றும் MRI ஸ்கானர் உள்ளிட்ட பல பரி சோதனைகளை மேற் கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள் ளதாக அதன் செயலாளர் சானக தர்மவிக்ரம சுட்டிக்காட்டினார்.

அதேநேரம், தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள ஊழி யர்கள் அதிகளவில் பணிச் சுமையை சுமக்க வேண்டியுள் ளதால் கடும் நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர். எனவே, இந் தச் சேவைகளில் உள்ள வெற்றிடங்களுக்கு உடனடியாக ஆட்சேர்ப்பு செய்யுமாறு கேட் டுக்கொள்கிறோம்.

இல்லாவிட்டால், அடுத்த சில மாதங்களில் பணியாளர்கள் பற்றாக்குறையால் சுகாதார சேவை கடுமையாகப் பாதிக்கப்ப டும் என்றும் அவர் எச்சரித் தார். (நி-8)

## தேயிலை ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு

(கொழும்பு) இந்த வருடத்தின் முதல் 8 மாதங்களில் தேயிலை ஏற்று மதிவருமானம் 8.3 வீதத்தால் அதிகரித் துள்ளது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த அதிகரிப்பு பதிவாகியுள்ளது. வருடத்தின் முதல் 8 மாதங்களில் தேயிலை ஏற்று மதியின் மூலம் 942.3 மில் லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளது. (நி-8)

லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு:
0091956615671 9
WU MoneyGram Ria
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை உடனடியாக இங்கு விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

## வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு விசேட செயற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தினை முன் னிட்டு யாழ். பொதுசன நூலகத்தின் சிறு வர் பகுதியில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு "அமெரிக்க கோணர் அமைப் பினால்" ஆங்கில அறி வினை விருத்தி செய் யும் பொருட்டு விசே செயற்பாடுகள் நடத்தப் பட வுள்ளது என யாழ். மாநகரசபை பிரதம நூல கர் அறிவித் துள் ளார். (நி-8)


## பெயர்மாற்ற அறிவித்தல்

அரானி வடக்கு செட்டியார் மடத்தில் வசிக்கும் இம்ரானா-யஸ்மினா ஆகிய நான் எனது பிள்ளைகள் முகமட் நிஹான். பாத்திமா நிஹானா ஆகிய பெயர்களை 19.10.2024 இன்று முதல் நிஹான். நிஹனா என பெயர் மாற்றம் செய்கிறேன். எனவே இனி வரும் காலங்களில் இவர்கள் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சனநாயக குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள தாய், இ.யஸ்மினா. (2341)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
09 – 09 – 1925



மறைவு
19 – 10 – 2014

### அமரர்.சுப்பையா திருநாவுக்கரசு

(இளைப்பாறிய இ.போ.ச. சாரதி)

பாசமிகு தந்தையே எம்மை வளர்த்து பண்பு புகட்டி வளமுடனே வாழ வைத்த எங்கள் அப்பாவே தெய்வத்துள் நீங்கள் நிறைந்து விட்டாலும் வாழும் நாங்கள் நித்தமும் நினைத்தே வாழுவோம். உங்கள் ஆத்மா சாந்திக்காக வெல்வில் முருகனை வேண்டுகின்றோம்.

(438)

"மூர்த்தி வாசம்"
முருகமூர்த்தி வீதி, சங்கானை.

உங்கள் நினைவுகளுடன்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## இராசிபலன்

19.10.2024
ஐப்பசி 02, சனிக்கிழமை
துதியை பிற்பகல் 1.16 மணிவரை
பரணி பிற்பகல் 2.42மணிவரை

சுபநேரம் -3.02-4.32 மணிவரை
இராகுகாலம் -9.02-10.32 மணிவரை
கார்த்திகை விரதம்

சந்திராஷ்டமம்.
உத்தரம், அத்தம்

வளவன்

**மேஷம்** – குடும்பத்தினர் உங்கள் முயற்சிகளுக்கு பக்க பலமாக இருப்பர், திட்டமிட்ட காரியங் களில் திசைதிருப்பங்கள் ஏற்பட லாம், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**ரிஷபம்** – பொறுப்பாக வேலை களைச் செய்தாலும் ஏதா வது பழிச்சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள்.

**மிதுனம்** – வெளியூர் தொடர்பு கள் அனுகூலம் தரும், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**கடகம்** – கண்ணியம்மிக்க ஒருவ ரின் சந்திப்பு இடம் பெறலாம், நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் கூடும் நாள், செயற் பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்

**சிம்மம்** – சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், புதிய முயற்சி களில் ஆர்வம் காட்டு வீர்கள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி** – மனச்சஞ்சலங்கள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய åV^, வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாம தமகலாம், வரவிற்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படலாம்.

**துலாம்** – பொதுநலனில் அதிக அக்கறை காட்டுவீர் கள், வெளியிடங் களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பிற இனத் தவரால் பெருமைகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** – பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், எதிர்ப் பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.

**தனுசு** – மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதி கரிக்கும், எதிர் பார்ப்புக்கள் நிறை வேறி ஏற்றம் பெறுவீர்கள், கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மகரம்** – வரவேண்டிய பணவரவு கள் வந்து சேரலாம், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உரு வாகும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பயணங் களால் பலனுண்டு.

**கும்பம்** – எதற்காகவும் வீண் பிடி வாதம் செய் வதை தவிர்ப்பு நல் லது, துணிவும் தன் நம்பிக்கையும் அதிகரிக்கும், உடன் பிறப்புக்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவர்.

**மீனம்** – பொது வாழ்வில் மதிப்பும் மரியாதை யும் உயரும், குடும்பத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும், செயற்பாட்டில் உற்சாகம் காட்டுவீர்கள்.

வறுமையில் நிறைவு காண்பவனே உண்மையான பணக்காரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதத் தலைவர்களை சந்தித்த த.ம.கூ. வேட்பாளர்கள்





(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பாராளு மன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழ் மக்கள் கூட்டணி கட்சியின் வேட்பாளர்கள் நேற்று மதத் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடி ஆசி பெற்றுக் கொண்டனர்.

கட்சியின் முதன்மை வேட்பாளரான வி. மணிவண்ணன் தலைமையில் போட்டியிடும் வேட்பாளர்கள் நல்லூர் ஆதீன குரு முதல்வர் மற்றும் யாழ். மறை மாவட்ட ஆயர் ஆகியோரைச் சந்தித்ததுடன் ஆசியினையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)

## வேட்பு மனு நிராகரிப்பு உயர் நீதிமன்றில் மனு

(வவுனியா)

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காக வன்னி மாவட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனு நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக உயர் நீதிமன்றில் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வன்னி மாவட்டத்திற்கான ஜனநாயகத் தேசிய கூட்டமைப்பு சமர்ப்பித்த வேட்புமனுவை நிராகரித்து மாவட்டத் தேர்தல் அதிகாரியினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை இரத்துச் செய்யுமாறு கோரியே இந்த மனு உயர் நீதிமன்றில் சமர்ப்பிக் கப்பட்டுள்ளது.

அனைத்து ஆவணங்களையும் முறையாக சமர்ப்பித்துள்ள நிலையில், மாவட்ட தேர்தல் அதிகாரி தனது வேட்புமனுவை நிராகரித்திருப்பது சட்டத்திற்கு முரணானது என்றும்,அந்த முடிவை இரத்து செய்யுமாறும் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் வன்னி மாவட்ட பொதுத்தேர்தல் வாக்கெடுப்பை நவம்பர் 14 ஆம் திகதி நடத்துவதற்கு இடைக்கால உத்தரவு பிறப்பிக்குமாறும் இந்த மனு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படும் வரையில் இடைக்கால உத்தரவை அமுல்படுத்துமாறும் மனுவில் மேலும் கோரப்பட்டுள்ளது. (6-8)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீசத்ய சாயி பாபாவின் 99 ஆவது அவதார தினத்தை முன்னிட்டு வழமை போன்று இவ் வருடமும் இரத்ததான முகாம் ஒன்றை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு நாளை 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை சேர்.பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீசத்ய சாயி சேவா நிலையத்தில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணி வரை நடைபெறவுள்ளது.

அரிய உயிர்காக்கும் சேவையில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (நி-8)

## பொலிஸ்மா அதிபர் பிரியந்த யாழிற்கு இன்று விஜயம்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் ம. பிரதீபன் மற்றும் யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லூசன் சூரிய பண்டாரவுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இச் சந்திப்பில், நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தல்கள் தொடர்பான பாதுகாப்பு முன்னேற்பாடுகள் தொடர்பில் இன்று யாழ்ப்பாணத்திற்கு பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய விஜயம் மேற்கொண்டு பொலிஸ் பொறுப்பதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ள ஏற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

இச் சந்திப்பில் உதவித் தேர்தல் ஆணையாளர் இ. கி. அமல்ராஜ், யாழ்ப்பாண பொலிஸ் தலைமைப்பீட பொறுப்பதிகாரி சம்லி பலுசேன ஆகியோர் கலந்து கொண்டு இருந்தனர். (6-8-33)

## மனவளக்கலை பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில் இந்த வாரத்திற்கான மன வளக் கலைப்பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுன் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் கே.செல்வகுமார் வழங்குவார் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

## பொதுத்தேர்தல் தொடர்பில் மாவட்ட செயலகத்தில் செயலமர்வு


(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல்கள் தொடர்பாக கிராம அலுவலர்களுக்கான முன்னாயத்தச் செயலமர்வானது யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று மு.ப 9 மணிக்கும் 11 மணிக்கும் இரண்டு கட்டங்களாக நடைபெற்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் செல்லுபடியற்ற வாக்குகள் அதிகமாகவிருந்த காரணத்தினால் வாக்காளர்களுக்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை பிரதேச செயலக ரீதியாக வெளிக்கள உத்தியோகத்தர்கள் மூலம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதால் அதற்கான ஒத்துழைப்பினையும் கிராம அலுவலர்கள் வழங்குமாறும் அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக வாக்களிப்பு நிலையங்களில் கிராம அலுவலகர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உதவித் தேர்தல் ஆணையாளர் இ.கி. அமல்ராஜினால் விளக்கமளிக்கப்பட்டது.

இச் செயலமர்வில் அனைத்து கிராம நிர்வாக அலுவலர்களும் கலந்து கொண்டனர். (6-8-33)



சர்வதேச இந்து இளைஞர் பேரவையால் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுகன் அவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை லண்டன் ஈலிங் கனக துர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிவபூமி அபயம்

## இலவச சிகிச்சை நிலைய திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)


இணுவில் சிவபூமி அபயம் இலவச சிகிச்சை நிலையத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம் பெறவுள்ளது

ஆசியுரையினை ஆன்மிகச்சுடர் ரிஷி. தொண்டுநாதன் சுவாமிகள் வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக அபயம் அறக்கட்டளைத் தலைவர் வைத்திய நிபுணர் கந்தப்பிள்ளை பார்த்தீபன், தொழிலதிபர் வி.யோகநாதன் (லண்டன்) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

குறித்த இல்லம் அமரர். முதலியார் செல்லத்துரை, கனகசபாபதி ஆனந்த ராஜா நினைவாக வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# அடிப்படை உரிமைகளைக்கோரி இலங்கை ஏதிலிகள் போராட்டம்



(சென்னை)

**இந்தியாவின் திருச்சி மத்திய சிறைச்சாலை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் இலங்கை ஏதிலிகள், தங்களை விடுவிக்குமாறு வலியுறுத்தி போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.**

இந்தப் போராட்டம் நேற்று முன்தினம் காலை ஆரம்பிக்கப்பட்டதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

திருச்சி மத்திய சிறைச்சாலை வளாகத்தில் அமைந்துள்ள ஏதிலிகளுக்கான சிறப்பு முகாமில் இலங்கை உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 110 இற்கும் மேற்பட்டவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அங்குள்ள இலங்கைத் தமிழர்கள் வழக்கு தொடர்பாக நீதிமன்றத்திற்குச் செல்லவோ, வைத்தியசாலைக்குச் செல்லவோ, நீதிமன்றம் மற்றும் தூதரகங்கள் தொடர்பான ஆவணங்களில் கையெழுத்திடவோ மாவட்ட நிர்வாகத் தரப்பில் மறுப்பு தெரிவிப்பதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.


இந்தநிலையிலேயே, தங்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதைக் கண்டித்தும்,

வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டு மற்றும் தண்டனைக் காலம் முடிவடைந்த தங்களை விடுவிக்கக் கோரியும் இலங்கை ஏதிலிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களில் சிலர் மரத்தின் மீது ஏறி தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி-8)

# ரயிலுடன் மோதிய யானைகள் தடம் புரண்ட எரிபொருள் தாங்கிகள்

## இரு யானைகள் பலி, பல யானைகள் படுகாயம்



(கொழும்பு)

ஹிங்குராங்கொட மற்றும் கல் ஓயா ரயில் நிலையங்களுக்கு இடையில் எரிபொருள் ரயில் ஒன்று காட்டு யானைகளில் மோதுண்டு தடம் புரண்டுள்ளது.

இதனால், மொத்தம் நான்கு பெற்றோல் டேங்கர்கள் தடம் புரண்டதாகவும், அவற்றில் இரண்டு கவிழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் இரண்டு காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதுடன், மேலும் பல யானைகள் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ரயில் தடம் புரண்டதன் காரணமாக குறித்த மார்க்கமூடான ரயில் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ரயில் பாதையும் பாரியளவில் சேதத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் கொலன்னாவ பெற்றோலியச் சேமிப்பு முனையத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கி எரிபொருள் ஏற்றிச் சென்ற ரயில் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதனால், கொழும்பு கோட்டையில் இருந்து மட்டக்களப்பு வரை பயணிக்கவிருந்த ரயில் சேவை இரத்துச் செய்யப்பட்டது. (நி-8)


**Raveens EMC**
Karaveddy

மேற்படி நிறுவனத்திற்குரிய Grade 11 மாணவர்கள் பங்குபெறும்

IMPROMPTU ORATORY (ENGLISH)AND PRIZE GIVING DAY-2024

**முன் ஆயத்தமில்லாப் பேச்சும்(ஆங்கிலம்) பரிசளிப்பு விழாவும் (13ஆவது ஆண்டு விழா)**

குறிப்பு:
**சபையோர் ஆங்கிலத்தில் வழங்கும் விடயத் தலைப்புகளுக்கே மாணவர்கள் பேசுவார்கள்.**

இடம்:
**வடிவேலர் மணி மண்டபம், அல்லையம்பதி, துன்னாலை.**

காலம்:
**20.10.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி**

தலைவர்:
**ப.ஈஸ்வரநாதன்- நிர்வாகி, ரவீன்ஸ் EMC கரவெட்டி.**

**Chief Guest**
Dr.Sivanantham Nithursan
Medical Officer- Anesthesia
Teaching Hospital, Jaffna.
(2nd Batch Student-2005-Gr-06)

**ஆர்வலர்கள், பழைய மாணவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

Raveens கல்விச் சமூகம்

(2327)



**கல்யாணமாலை**
**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1996-இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>6 இல் சூரி செவ்<br>கி.பா-15 3/4<br>உயரம் : 5'9"<br>தகைமை/தொழில்: Diploma in Teaching,Teacher(gov)<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/14853 | பிறப்பு:1998-இந்து<br>நட்சத்திரம் : கேட்டை<br>உயரம் -5'5"<br>தகைமை/தொழில்: BSc,Agent(London)<br>எதிர்பாாப்பு: பட்டதாரி,உத்தியோகம்<br>தொ.இ: G/14876 |
| பிறப்பு:1998-இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: HNDE, France<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் (பிரான்ஸ் மட்டும்)<br>தொ.இ: B/14854 | பிறப்பு-1999-இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா-39 ½<br>உயரம் -5'6"<br>தகைமை/தொழில்: College,Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14877 |
| பிறப்பு:1989-இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா-22<br>உயரம் :5'8"<br>தகைமை/தொழில்: Bsc,phD,Scientist(gov),(Australia)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14856 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா-9<br>உயரம் :5'4"<br>தகைமை/தொழில்: BSc,phD(following)(Canada)<br>எதிர்பார்ப்பு: Engineer,IT Field<br>தொ.இ: G/14882 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# தென்கொரியா : எதிரி நாடு
## சட்டத்தை மாற்றியது வடகொரியா



(பியாங்யாங்)

உலகில் சர்வாதிகார ஆட்சியில் இயங்கிவரும் வடகொரியா, தென்கொரியாவை எதிரிநாடு என்று குறிப்பிடும் வகையில் தனது சட்டத்தை மாற்றி அமைத்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன் வடகொரியா - தென்கொரியா இடையே மோதல்கள் காணப்பட்ட போதிலும் தென்கொரியாவை எதிரி நாடு என்று குறிப்பிடுவது இதுவே முதல் முறை என தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது தென் கொரியாவை நாட்டின் பிரதான எதிரியாக அறிவிக்கவும் அமைதியான கொரிய ஒருங்கிணைப்பு என்ற இலக்கை அகற்றவும், வட கொரியாவின் இறையாண்மையை வரையறுக்கும் வகையில் அரசியலமைப்பை மாற்ற அந்நாட்டின் ஜனாதிபதி கிம் ஜாங் உன் வலியுறுத்தியுள்ளார்.

இதையடுத்து கடந்த வாரம் வட கொரிய பாராளுமன்றம் கூடி அந்நாட்டின் அரசியலமைப்பை மாற்றி அமைத்துள்ளது. தென் கொரியாவை எதிரி நாடாக அறிவிக்க வேண்டும் என்பதற்காகவே கடந்த சில நாட்களுக்கு முன்பு பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாமல் காணப்பட்ட தென்கொரியா - வட கொரியாவுக்கு இடையே காணப்பட்ட சாலை மற்றும் தொடருந்து இணைப்புகள் அழிக்கப்பட்டுள்ளன

கடந்த ஜனவரி மாதம் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் முதல் முறையாக அரசியலமைப்பை மாற்றியமைப்பதற்கான தனது யோசனையை முன்வைத்துள்ளார். இந் நிலையில், தற்போதைய அரசியல் மாற்றம் சர்வதேச வல்லுநர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இந்த விடயம் தொடர்பில் குறிப்பிட்ட சர்வதேச வல்லுநர்கள், "இது வரை வடகொரிய ஜனாதிபதி பதவியில் இருந்தவர்கள் இருகொரிய நாடுகள் இடையே அமைதியையே பேண விரும்பினார்கள். எனினும் தற்போதைய ஜனாதிபதி கிம் ஜாங் உன் நல்லிணக்கத்தை பேணுவதில் இருந்து விலகிச் செல்கிறார். இவ்வாறான நிலையில், திடீரென நடக்கும் இந்த மாற்றங்களுக்கு மூன்று காரணங்கள் காணப்படுகின்றன.

அந்த வகையில் முதலாவதாக, தென்கொரியாவால் எங்கு தனது ஆட்சிக்குப் பாதிப்பு வருமோ என்று கிம் ஜாங் உன்னுக்கு உள்ள அச்சம் மற்றும் மக்கள் தனது வாரிசு அரசியலுக்கு எதிராக கிளர்ந்து எழுந்து விடுவார்களோ என்று அச்சம். இரண்டாவது, தென் கொரியா மீது அணு ஆயுதங்களைப் பயன்படுத்த வடகொரியா திட்டமிட்டு இருக்கலாம். தென்கொரியாவை எதிரி நாடு என்று வரையறுக்க இது கூட ஒரு காரணமாக இருக்கலாம்.

மூன்றாவது, வடகொரியா மீது பல்வேறு பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளமையினால் அணு சக்தி சார்ந்த ஒப்பந்தங்களை அமெரிக்கா உடன் கைச்சாத்திட தென்கொரியா மூலமே செல்ல வேண்டி இருக்கிறது.

இந்த நேரத்தில் தென் கொரியாவை எதிரி நாடாக அறிவித்து எல்லா உறவுகளையும் முறித்தால், நேரடியாக அமெரிக்கா உடன் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் சிந்தித்திருக்கலாம்" என சர்வதேச வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வட கொரியாவில் சுமார் 10 லட்சம் இளைஞர்கள் இராணுவத்தில் சேர கையெழுத்திட்டு இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

சமீபத்தில் தென் கொரியா அதன் ஆளில்லா விமானங்களை ஏவியதாகவும், தங்களின் எல்லை சாலைகளை சேதப்படுத்தியதாகவும் வட கொரியா குற்றச்சாட்டுகளை முன்வைத்ததை தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையிலான இராணுவப் பதற்றம் அதிகரித்துள்ளது. மேலும், கடந்த ஆண்டு அமெரிக்காவை எதிர்த்து போரிடுவதற்காக முன்வந்த இளைஞர்களை விட தற்போதைய இராணுவ சேர்க்கையானது அதிகரித்து இருப்பதாக குறிப்பிடப்படுகின்றது. (நி-8)

# ஹமாஸ் தலைவர் சுட்டுக் கொலை
## இது வெறும் ஆரம்பமே...
## நெதன்யாகு சூளுரை



(ஜெருசலேம்)

ஹமாஸ் தலைவர் யாஹ்யா சின்வார் கொல்லப்பட்டது, ஹமாஸ் அமைப்பிற்கு வெறும் ஆரம்பம் மட்டுமே என இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

யாஹ்யா சின்வார் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தீய சக்திகள் பலத்த அடியை சந்தித்துள்ள போதிலும், தங்களுக்கு முன்னால் உள்ள பணி இன்னும் முழுமையடையவில்லை என்றும் நெதன்யாகு தெரிவித்தார்.

சின்வாரின் கொலையை போரில் ஒரு முக்கிய தருணம் என்று அழைத்த நெதன்யாகு, காசாவில் வசிப்பவர்கள், இறுதியாக ஹமாஸின் கொடுங்கோன்மையிலிருந்து [illegible] வாய்ப்பு என்றும் விவரித்துள்ளார்.

மேலும், குறித்த அறிக்கையில் மீதமிருக்கும் ஹமாஸின் தலைவர்களும் ஒழித்துக் கட்டப்படுவார்கள் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை இஸ்ரேலியர்களை பணயக்கைதிகளாக வைத்திருப்பவர்கள், ஆயுதங்களை தூக்கி எறிந்து விட்டு அவர்களை திருப்பி அனுப்ப அழைப்பு விடுத்ததோடு, அவ்வாறு செய்பவர்கள் வெளியே சென்று வாழ அனுமதிக்கப்படுவார்கள் என்றும் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும், சின்வாரை கொலை செய்த வீரர்களை பாராட்டிய அவர், காசாவில் இன்னும் பணயக்கைதிகளாக இருப்பவர்களின் குடும்பத்தினரிடம், "உங்கள் அன்புக்குரியவர்கள் அனைவரும் வீடு திரும்பும் வரை முழு பலத்துடன் இஸ்ரேல் பணியை தொடரும்" எனவும் வலியுறுத்தியுள்ளார். (நி-8)

# ஹ...
# பயங்...
# காத்...
## வெளி...



இந்த விடயம் தொடர்பிலான செய்திகளை சர்வதேச ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது. ஈரானை அழிப்பதற்காகவே கடந்த 20 ஆண்டுகளாக இரகசியத் திட்டம் ஒன்றை இஸ்ரேல் மேற்கொண்டு வந்துள்ளது.

மத்திய கிழக்கில் வெடித்துள்ள மோதல் நாளுக்கு நாள் மோசமடைந்து வரும் நிலையில் இது

# பிரித்தானிய...
## அவுஸ்திரேலிய...



(லண்டன்)

பிரித்தானியாவின் மன்னர் மூன்றாம் சார்லஸ் மற்றும் ராணி கமிலா ஆகியோர் இந்த வாரம் அவுஸ்திரேலியாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொள்கின்றனர்.

அரியணை ஏறிய பிறகு சார்லஸின் முதல் அவுஸ்திரேலியப் பயணம் இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நதன்யாகுவின் கட்டளைக்காக
# ங்கர ஆயுதங்களுடன்
# த்திருக்கும் இஸ்ரேல்!
## ரியான தகவல் அதிகரிக்கும் பதற்றம்




**(ஜெருசலேம்)**

**ஈரானை முழுமையாகத் தாக்கி அழிக்கும் சில மோசமான ஆயுதங்களை இஸ்ரேல் தன்வசம் வைத்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.**

அந்த பிராந்தியத்தில் மட்டுமின்றி சர்வதேச அளவிலும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இஸ்ரேல் தனது அண்டை நாடான ஈரானை அழிக்கத் தயாராக உள்ளதாகவும், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் உத்தரவிற்கு மட்டுமே அந்நாட்டு இராணுவம் காத்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஈரான் நாட்டின் சில முக்கிய இடங்கள் மீது தாக்குதல் நடத்துவது குறித்து இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு ஆலோசித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

அதேநேரம் எப்போது இந்தத் தாக்குதல் நடக்கும் எந்த இடங்கள் மீது தாக்குதல் நடத்தப்படவுள்ளது என்பது குறித்து இது வரை எந்த தகவலும் வெளியாகவில்லை.

ஈரானை தாக்கி அழிக்க உருவாக்கப்பட்டுள்ள இந்த திட்டத்திற்கு இஸ்ரேல் இது வரை பல பில்லியன் டொலர்களை செலவழித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் இந்த சில ஆயுதங்களை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்த போது தான் இஸ்ரேலிடம் இந்தளவுக்குப் பயங்கரமான ஆயுதங்கள் இருப்பது தெரியவந்துள்ளது.

இஸ்ரேலிடம் வலிமையான ஆயுதங்கள் பல இருப்பதாகக் கூறப்படும் நிலையில், அதில் பெரும்பாலான ஆயுதங்கள் ஈரானைக் குறிவைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

கடந்த மாதம் ஏமன் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அதுபோன்ற ஒரு ஆயுதம் தான் பயன்படுத்தப்பட்டது. அதுவே ஈரானுக்கு கிட்டத்தட்ட ஒரு எச்சரிக்கை போலவே இருந்தது.

மேலும், இஸ்ரேல் தங்களிடம் உள்ள F-15 போர் விமானங்களையும் ஈரான் மனதில் வைத்துக் கொண்டு மாற்றி வடிவமைத்துள்ளதாம். இதன் மூலம் ஈரானை இஸ்ரேலால் முழுமையாகத் தாக்கி அழிக்கக் கூட முடியும்.

அத்துடன் இஸ்ரேல் வசம் இருக்கும் குண்டுகள் ஈரானின் எண்ணெய் கிடங்குகளை தாக்கி அழிக்க இஸ்ரேல் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த ஆயுதங்களை எல்லாம் வைத்து ஒரே நேரத்தில் ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதலை நடத்தினால் பாதிப்புகள் மிக மோசமாக இருக்கும். அது அடுத்த உலகப் போரைக் கூட தொடங்க வாய்ப்பு இருப்பதாகவே அஞ்சப்படுகிறது. (நி-8)

## ரிய மன்னர்
## லியா விஜயம்



பிரித்தானிய அரசர் ஒருவர் அவுஸ்திரேலியாவிற்கு வருவது இதுவே முதல் முறை என்பதாலும் இந்த விஜயம் முக்கியத்துவம் பெறுகிறது. வெள்ளிக்கிழமை மாலை முதல் எதிர்வரும் புதன் கிழமை வரை பிரித்தானிய மன்னரும் அவரது மனைவியும் அவுஸ்திரேலியாவில் இருப்பார்கள். அரச சுற்றுப்பயணம் சிட்னி மற்றும் கன்பெராவில் நிகழ்வுகளை உள்ளடக்கியது.

சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, புற்றுநோய் ஆராய்ச்சி மற்றும் குடும்ப வன்முறை போன்ற வெளிப்படையான "அரசியல் அல்லாத" பிரச்சினைகள் தொடர்பில் இந்த விடயத்தில் கவனம் செலுத்தப்படும்.

ஒக்டோபர் 21 மற்றும் 26 க்கு இடையில் சமோவா தலைநகர் அபியாவில் நடைபெறும் பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டிலும் அவர் கலந்து கொள்கிறார்.

75 வயதான மன்னரின் தொடர்ச்சியான புற்றுநோய் சிகிச்சையின் காரணமாக பயணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. (நி-3)

# ஷேக் ஹசீனா உட்பட
# 45 பேருக்கு பிடியாணை



(இஸ்லாமாபாத்)

பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு கைது பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பங்களாதேஷில் கடந்த ஜூலை மற்றும் ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற மாணவர் போராட்டத்தின் போது இழைக்கப்பட்ட குற்றங்களுக்காக உள்ளூர் நீதிமன்றம் அவருக்கு இந்த பிடியாணையை பிறப்பித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஷேக் ஹசீனா கட்சியை சேர்ந்த பொதுச் செயலாளர் மற்றும் ஹசீனாவின் அரசியல் கட்சியின் மற்ற உயர் மட்டத் தலைவர்கள் உட்பட 45 பேருக்கு எதிராகவும் இந்த கைது பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஷேக் ஹசீனாவை நவம்பர் 18ஆம் திகதிக்குள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி அநுரவிடம் நீதியை எதிர்பார்க்கும் மக்கள்

### ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையை வெளியிடுமாறு கோரிக்கை



(கொழும்பு)

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கையினை வெளியிடுவது ஜனாதிபதியின் பொறுப்பாகும்" என ஐக்கிய ஜன நாயகக் குரல் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது "உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை அறிக்கையினை வெளிப்படுத்துமாறு நான் ஜனாதிபதியிடம் கோருகின்றேன்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிவழங்குவதாகக் கூறி ஜனாதிபதிகள் ஆட்சிக்கு வந்தனர். தற்போதைய ஜனாதிபதியிடமும் மக்கள் நீதியை எதிர்ப்பார்க்கின்றனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரத்தின் உண்மைத் தன்மையை கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கையினை வெளியிடுவதற்கு அரசாங்கம் இழுத்தடிப்பு செய்கின்றமை வேடிக்கையானது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணை அறிக்கையினை வெளியிட வேண்டும் என தற்போதைய ஜனாதிபதியும் சவால் விடுத்திருந்தார்.எனவே தற்போதைய அரசாங்கத்துடன் தொடர்புடைய எந்தவொரு தரப்பினரையும் பாதுகாக்கும் நோக்கில் இந்த அறிக்கை இரகசியமான முறையில் வைக்கப்படுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

எனவே அரசாங்கம் இந்த விவகாரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிவழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றேன்" இவ்வாறு ஐக்கிய ஜனநாயகக்குரல் கட்சியின் ஊடகப்பேச்சாளர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார். (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 180 | 150 | 200-220 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 170 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 200-250 |
| தக்காளி | 320 | 250 | 400 | 290 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 250 | 180 | 150-200 |
| கோவா | 230 | 300 | 250 | 290 |
| கரட் | 150 | 220 | 200 | 270 |
| பூசணி | 80 | 60 | 80 | 60 |
| புடோல் | 80 | 140 | 80 | 200 |
| வாழைக்காய் | 180 | 120 | 130 | 60-100 |
| சின்ன வெங்காயம் | 250 | 350 | 350 | 250-300 |
| பெரிய வெங்காயம் | 300 | 240 | 250 | 280 |
| பாகற்காய் | 500 | 500 | 400 | 400 |
| வெண்டக்காய் | 160 | 200 | 150 | 130 |
| கருணைக் கிழங்கு | 150 | 160 | 160 | 140 |
| பயற்றங்காய் | 450 | 450 | 250 | 400-500 |
| லீக்ஸ் | 200 | 300 | 250 | 350 |
| பீற்றூட் | 140 | 100 | 150 | 150 |
| கறிமிளகாய் | 600 | 500 | 600 | 420 |
| முருங்கைக்காய் | 350 | 250 | 200 | 90-120 |
| போஞ்சி | 480 | 500 | 450 | 320 |
| கத்தரிதம்புள்ள | 130 | 100 | 150 | -- |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 70 | 60 |
| தேசிக்காய் | 600 | 300 | 400 | 400-420 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 140 | 130 | 90-170 |
| இராசவள்ளி | -- | 200 | 1500 | 580 |
| வெங்காயப்பூ | -- | 450 | 400 | -- |
| முள்ளங்கி | 100 | 120 | 150 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 120 | 100 |
| வல்லாரை | 60 | 35 | 80 | 100 |
| ஈரப்பலா | -- | -- | 100 | -- |

## இன்று ஒரு தகவல் 245



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# இயந்திர வாழ்க்கை

இந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்த ஒருவர் ஒரு நாள் வந்தார். ஒரு முக்கியமான விடயத்தைப்பற்றி எங்கள் மக்களுக்கு அவசியம் சொல்லியாகனும் சார் என்றார்.

அது என்ன என்று கேட்டேன். இந்தக் காலத்திலே திருமணமான புதிதிலே கணவன் மனைவி இரண்டு பேரும் சந்தோஷமாக குடும்பம் நடத்துகிறார்கள். கொஞ்ச நாளிலே வாழ்க்கை மிகவும் இயந்திரமயமாக ஆகிவிடுகின்றது.

கணவன்-மனைவி இரண்டு பேருமே வேலைக்கு போகின்றவர்களாக இருந்து விட்டால் அது இன்னமும் மோசமாகப் போய்விடும் சார் என்று சொல்லிக் கொண்டு போனார். நிறைய அனுபவப்பட்டிருப்பார் போல இருக்கிறது.

இதே கருத்தைக் கொஞ்ச நாளைக்கு முன்னாலே வெளியூரிலே இருந்து ஒரு அம்மாவும் எழுதியிருந்தார். கணவனும் மனைவியும் ஒரு நாளிலே கொஞ்ச நேரமாவது செலவு செய்து ஒருவர் உணர்ச்சியை மற்றவர்கள் புரிந்து கொண்டு நடந்து கொண்டால் வாழ்க்கை எவ்வளவு நன்றாக இருக்கும் என்று கேட்டிருந்தார்கள் அவர்கள்.

இல்வாழ்க்கை இயந்திரகதியாக ஆகிவிட்டது என்றால் நிலைமை எப்படி இருக்கும் என்பதை புரிந்து கொள்வதற்கு ஒரு புராணக்கதையையும் அவர்களே குறித்து அனுப்பியிருந்தார்கள். அதை இப்போது உங்களுக்குச் சொல்கின்றேன். கேட்டு வைத்துக் கொள்ளுங்கள்.

வாசஸ்பதி மிச்ரர் என்று ஒருவர். வடமொழி கவிஞர். பொழுது விடிந்து பொழுது போனால் எழுதுவதுதான் அவர் வேலை. வாழ்நாள் முழுவதையும் இலக்கியங்கள் படைப்பதிலேயே கழித்தவர்.

ஒரு சமயம் ஒரு பெரிய நூல் ஒன்றை எழுதிக்கொண்டிருந்தார். இரவு நேரம் சின்ன விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது.

அந்த வெளிச்சத்திலே அதிக நேரமாக கண்முழித்து உட்கார்ந்து கொண்டு எதைப் பற்றியும் கவலைப்படாமல் அவர்பாட்டிற்கு எழுதிக்கொண்டே இருந்தார். அந்த நேரம் பார்த்து பலமாக ஒரு காற்று வீச ஆரம்பித்தது. விளக்கு அணைந்து போய்விட்டது. கொஞ்ச நேரம் இருட்டு.

மறுபடியும் விளக்கு எரிய ஆரம்பித்தது. திடீர் என்று விளக்கை ஏற்றியது யார் என்று நிமிர்ந்து பார்த்தார். ஒரு வயதான கிழவி நின்று கொண்டிருந்தார். இவர் மிகவும் மரியாதையாக அந்த அம்மாவைப் பார்த்து நல்ல நேரத்திலே வந்து உதவி செய்திருக்கிறாய்! யாரம்மா நீ? என்று விசாரித்தார்.

அந்த அம்மாவுக்கு ஒரே திகைப்பு என்ன இது? இப்படி கேட்கின்றீர்கள். நான் தான் உங்கள் மனைவி பாமதி என்றார். என்னது? என் மனைவி பாமதியா? இவ்வளவு கிழவியாக ஆகிவிட்டாய் என்றார். ஆமாம் நான் தான். இப்படி ஆகிவிட்டேன். நமக்கு திருமணம் ஆகி 50 வருடங்கள் ஆகிவிட்டது. இலக்கியங்கள் படைப்பதிலேயே உங்களுக்கு வயதாகிவிட்டது. உங்களுக்கு பணிவிடை செய்வதிலேயே எனக்கும் வயதாகிவிட்டது.

இன்றைக்கு கொஞ்சம் அசந்து போய் கண்ணை மூடிவிட்டேன். அது தான் விளக்கு அணைந்து போய்விட்டது. என்னை மன்னித்து விடுங்கள் என்றார்அந்த அம்மா.

இதைக் கேட்டதும் அந்தக் கவிஞர் கலங்க ஆரம்பித்து விட்டாராம். 50 வருட வாழ்க்கையை எனக்காக அர்ப்பணித்த உனக்கு நான் என்ன கைமாறு செய்யப்போகின்றேன் தெரியுமா?

இதோ நான் எழுதிக்கொண்டிருக்கின்ற நூலிற்கு பாமதி என்று உன்னுடைய பெயரையே சூட்டப் போகின்றேன் என்றார். அதே மாதிரி சூட்டியும் விட்டார். நூலினுடைய முதல் ஓலையிலே பாமதி என்று எழுதிவிட்டார். இதனால் என்ன பிரயோசனம்? 50 வருட இல்வாழ்க்கை இனிமேல் திரும்பி வருமா?

இப்படிப்பட்டவர்கள் இந்தக் காலத்திலே யாராவது இருந்தால் அவர்கள் பேசாமல் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பது நல்லது. திருமணம் செய்ய வேண்டும் என்று முடிவு செய்து விட்டால் இல்வாழ்க்கையை முறையாக நடத்த வேண்டும். அது தான் மரியாதை.இனிமேலாவது வீட்டிலே இயந்திரமாக நடந்து கொள்பவர்கள் இருந்தால் அவர்கள் அந்தப் பழக்கத்தை மாற்றிக் கொள்வது நல்லது. சில பேர் எந்த அளவுக்கு இயந்திரமாக இருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்வதற் ஒரு உதாரணம் சொல்கின்றேன் கேளுங்கள்.

ஒரு கணவன் தினமும் காலை டிபன் சாப்பிடுகின்ற விதம் எப்படி தெரியுமா? டிபன் ரெடி என்றால் போதும் உடனே பத்திரிகையைப் பிரித்துக் கையிலே வைத்துவிடுவார். கண்ணாடியை போட்டுக்கொள்வர். பேப்பரை பார்த்துக் கொண்டே முணுமுணுத்து கொண்டிருப்பார். அந்த அம்மா ஒரு தட்டிலே டிபனைக் கொண்டு போய் அவர் பக்கத்திலே வைப்பார். அவர் கண்ணும் கவனமும் பேப்பரிலே தான் இருக்கும். ஒரு கை மட்டும் டிபன் இருக்கின்ற இடத்தைத் தேடி கண்டு பிடித்து இயந்திரமாக எடுத்து வாயிலே போட்டுக்கொள்ளும். இதே வழக்கமாகப் போய்விட்டது. அந்த அம்மா பொறுத்துப் பொறுத்து பார்த்தார். ஒரு முக்கியமான நாள் வந்தது. அவர்கள் திருமண நாள்.

காலையில் அந்த ஆள் வழக்கம் போல் டிபன் சாப்பிட பேப்பரும் கையுமாக உட்கார்ந்தார். இவரிடம் போய்நின்று கொண்டு சாப்பிடுங்க... சாப்பிடுங்க.... என்று சொல்லிக் கொண்டே இருந்தார். அவரும் சாப்பிட்டார்.டிபன் எப்படி இருக்கிறது என்று கேட்டார். திருமண நாளுக்கு இன்றைக்கு கேக் செய்தீர்களா! ரொம்ப சுவையாக இருக்கிறது என்றார் அவர். கொஞ்சம் முகத்தை திருப்பி தட்டிலே இருக்கிறது என்ன என்று பாருங்கள் என்றார்.

இவரும் மெதுவாக பேப்பரிலே இருந்து முகத்தைத் திருப்பி தட்டைப்பார்த்தார். அங்கே இருந்தது என்ன தெரியுமா? மாட்டுக்கு வைக்கின்ற புண்ணாக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடத்தப்படவிருந்த மணல் மீட்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி கிளாலிப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து கொண்டு செல்வதற்கு தயாராக வைக் கப்பட்டிருந்த 14 டிப்பர் மணல் பொலிஸாரால் மீட்கப்பட்டுள ளது.

கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபுல் செனவிரட்ணவிற்கு கிடைத்த இரகசிய தகவலை யடுத்து கிளாலி பகுதியில் பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜீ.குலரட்ண தலைமையில் குறித்த பகுதி யில் 14 டிப்பர் மணல் பொலி ஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

மேலும் சம்பவம் தொடர்பாக பளைப் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின் றனர். (6-8-316)

# தமிழரசுக்கட்சி தேர்தல் அலுவலகம் மன்னாரில் திறந்து வைப்பு



(மன்னார்)

பாராளுமன்றத் தேர்தலுக் கான தமிழரசு கட்சியின் மன் னார் மாவட்டத்திற்கான பிர தான கட்சி அலுவலகம் நேற்று முன்தினம் மாலை மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதியில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

அதே நேரம் தமிழரசுக் கட்சியின் இளைஞர்களுக் கான கூட்டம் மன்னார் தனியார் விடுதியில் இடம்பெற் றது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள தேவன்பிட்டி, வட்ட கண்டல், வெள்ளிமல, சாந்தி புரம், தலைமன்னார், பேசாலை, முருங்கன் உள்ளடங்கலாக பல கிராமங்களைச் சேர்ந்த இளைஞர்கள் குறித்த ஒன்று கூடலுக்கு வருகை தந்து தங்க ளது ஆதரவை வெளிப்படுத்தி யிருந்தனர். (நி-8-285)

# உள்ளக விளையாட்டு அரங்கு நீச்சல் தடாகம் திறந்து வைப்பு

(குருமன்காடு)

வவுனியா - ஓமந்தையில் மாவட்ட விளையாட்டு வளாக உள்ளக அரங்கு மற்றும் நீச்சல் தடாகம் என்பன நேற்று திறந்து வைக்கப்பட்டன.

வவுனியா, ஓமந்தை பகுதி யில் மாவட்ட செயலாளர் பீ.ஏ.சரத்சந்திர மற்றும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஆகியோரினால் திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது சான்றிதழ் உடனான உயிர் காப்பு மற்றும் நீச்சல் பயிற்சி வகுப்புகள், கடினப்பந்து பயிற்சி வகுப்புகள் என்பன ஆரம்பித்து வைக்கப் பட்டன.

இதன்போது விளையாட்டு



பயிற்சியாளர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் உட்பட பலர் இதில் கலந்து கொண்ட னர். (6-8-250)

# ஐரோப்பாவில் தமிழ் மொழியிலான முதலாவது பல்கலைக்கழகம் உதயம்

ILC - Institute of Languages and Culture (மொழி பண்பாட்டு நிறுவகம்) சுவிற் சர்லாந்து நாட்டில் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகத்துக்கு இணையான உயர்கல்வி அமைப்பாகும். இவ் உயர்கல்வி அமைப்பினால் வழங்கப்பெறும் சான்றிதழ்கள் சுவிற்சர்லாந்து நாட்டில் மட்டுமன்றி ஏனைய நாடுகளிலும் ஏற்புடைமை யைக் கொண்டிருக்கும். நெடுங்காலமாக புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ்மொழி, தமிழ்க்கலைகள், பண்பாடு ஆகியவற்றில் அங்கீகாரத் துடனான உயர்கல்வியை மேற்கொள்வதற்கு வாய்ப்புக் கிடைக்காதிருந்தது.

இவ் வசதியை ஏற்படுத் துவதற்காக பல்வேறு நாடு களிலுமுள்ள பல்கலைக் கழகங்களுடனும் மேற் கொள்ளப்பெற்ற தொடர்புகள் வெற்றியளிக்காமையினால் தமிழுக்காக ஒரு உயர்கல்வி அமைப்பு ஐரோப்பாவில் உருவாக்கப்படவேண்டும் என்ற உறுதியான தீர்மானத் துடன் எடுக்கப்பெற்ற முயற்சி கள் வெற்றியளித்து, சுவிற்சர் லாந்து தமிழ்க் கல்விச் சேவையினால் உரிய அங்கீ காரங்களுடன் ILC உரு வாக்கப்பெற்றுள்ளது. இவ் அமைப்பின் இயக்குநராக கலாநிதி பார்த்திபன் கந்தசாமி செயற்படுகிறார்.

ILC இன் உயர்கல்வி தொடக்கவிழா, கடந்த 28 செப்ரெம்பர் 2024 ஆம் நாள் சனிக்கிழமை சொலத்தூண் மாநிலத்தின் BEBARINA மண்டபத்தில் நடைபெற்ற சுவிற்சர்லாந்து தமிழ்க் கல்விச் சேவையின் முத்தமிழ்விழா வின் ஒரு பகுதியாக மிகச் சிறப்பாக நடைபெற்றது. விருந் தினர்களாக மலேசியா, சிங் கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து வருகை தந்திருந்த பேராசிரி யர் குமரன் சுப்பிரமணியன், இணைப் பேராசிரியர் சீதா லட்சுமி ஆகியோருடன், மத குருமார்களான சிவருசி தர்ம லிங்கம் சசிகுமார், அருட் கலாநிதி ஆனந்தநாயகம் யூட்ஸ் முரளிதரன் ஆகியோ ரும் கலந்து சிறப்பிக்க தமிழ்ப் பள்ளிகளின் மாநில இணைப் பாளர்கள், பள்ளிமுதல்வர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாண வர்கள், செயற்பாட்டாளர்கள், ஆர்வலர்கள் என அரங்கம் நிறைந்த மக்களுடன் பெரு விழாவாக இவ்விழா நடை பெற்றது.

இதற்கு ஈழத்திலிருந்து பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸ், பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் பரமு புஸ்பரத் தினம் ஆகியோரும் தமிழ் நாட்டிலிருந்து பேராசிரியர் குருசாமி அரசேந்திரன் அவர்க ளும் காணொளி ஊடாக வாழ்த்துரை வழங்கியிருந்த னர். ஐரோப்பிய மொழி மதிப் பீட்டுப் பொதுச் சட்டகத்துக் கமைய (CEFR) தமிழ்மொழி யில் ஆண்டு 10, ஆண்டு 12 நிறைவுசெய்த மாணவர்க ளுக்கு ஆண்டு அடிப்படையில் A1-C2 தரநியமத்துக்கு அமைய ILC இன் சான்றிதழ் களும் வழங்கப்பெற்றன.

சிறப்பாக மொழி பண்பாட்டு நிறுவகத்துக்கும் மலேசியத் தமிழாய்வு நிறுவனத்துக்கும் இடையில் தமிழ்க்கல்வி மேம்பாட்டுக்காக இணைந்து செயற்படுதல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமும் கையொப்பமிடப் பெற்றது.

மொழிபண்பாட்டு நிறுவகம் (ILC) இவ்வாண்டுமுதல் தமிழ் மொழி, தமிழ்க்கலைகள், பண் பாடு ஆகியவற்றில் சான்றிதழ், பட்டயக்கல்வி, இளமாணி ஆகிய கற்கைநெறிகளையும் பட்டப் பின்படிப்புகளையும் ஐரோப்பிய நாடுகளிலும் கனடா போன்ற ஏனைய நாடுகளிலும் வழங்கவுள்ளது. இவ் உயர் கல்வி அமைப்பினால், தமிழ் இளங்கலைமாணி, தமிழ் கற்பித்தல் பட்டயக்கல்வி ஆகிய கற்கைநெறிகள் 2024 ஒக்டோபர் மாதம் முதல் சுவிற்சர்லாந்திலும் ஏனைய ஐரோப்பிய நாடுகள் சிலவற் றிலும் வழங்கப்படவுள்ளன. தமிழ்க்கலைகளுக்கான கற் கைகள் அடுத்த ஆண்டிலி ருந்து நடைபெறும்.

# காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் 30 பேரிடம் பூர்வாங்க விசாரணை


(தருமபுரம்)

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் ஏற் பாட்டில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங் களைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் 30பேரிடம் கிளிநொச்சி பிராந் திய அலுவலகத்தில் நேற்று விசாரணைகளை முன்னெடுக் கப்பட்டது. காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத் தின் உறுப் பினர் தியாகராஜா யோகராஜா மற்றும் அலுவலகத் தின் நிறைவேற்றுப் பணிப் பாளர் சிரேஷ்ட சட்டத்தரணி ஜெகநாதன் தற்பரன் ஆகியோ ரின் தலைமையில் குறித்த விசாரணை முன்னெடுக்கப்பட் டது.

காணாமல் போனோர் விப ரங்கள் இதுவரையில் 21,630 இற்கு மேற்பட்ட விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப்பட்டுள் ளதாகவும் இதில் விசார ணைக்காக 14 ஆயிரத்து 988 விண்ணப்பப் படிவங்கள் விசா ரணைக்காக ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளதுடன் இதில் 6688 விண்ணப்பப் படிவங்கள் பூர் வாங்க விசாரணைகள் நடை பெற்று முடிக்கப்பட்டுள்ளது.

3800 இற்கும் மேற்பட்ட விண்ணப்பப் படிவதாரிகளுக்கு இரண்டு லட்சம் ரூபாய் வழங் கப்பட்டுள்ளதாகவும் இந்தக் கொடுப்பனவு அவர்களுக்கான இழப்பீட்டுக்கான கொடுப்பனவு அல்ல வாழ்வாதாரத்தை மேற் கொள்வதற்காகவே வழங்கப் பட்டு வருவதாகவும், இதுவரை யில் செய்து முடிக்கப்பட்ட பூர் வாங்க விசாரணைப் படி 3000 இற்கும் அதிகமானவர்களுக் கான சான்றிதழ் வழங்கு வதற்கு பதிவாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைக்காக



830 விண்ணப்பப் படிவங்கள் தொடர் விசாரணைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் 17பேருடைய விண் ணப்பப்படிவங்களில் அவர்க ளுக்கு என்ன நடந்தது என்ப தனை முழுமையாக கண்ட றியப்பட்டுள்ளதாகவும் இதில் மூவர் உயிருடன் இல்லாத காரணத்தினால் இவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை அறிவதற்காக ஏனைய 14 பேரு டைய விண்ணப்பப் படிவங்க ளும் திரட்டப்பட்டு வருவதா கவும் இதன்போது தெரிவித் தனர். (6-8-316)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 610





இங்கு உள்ள வெளிச்சம் எதனால் இவ்வளவு குளிர்ந்து மனோரம்மியமாக இருக்கிறது? தண்ணீருக்குள் புகுந்து வருவதால் ஒளிக்கிரணங்களும் குளிர்ந்திருக்கின்றன போலும்! ஒளி எங்கிருந்து வருகிறது? மாளிகைச் சுவர்களிலிருந்தே வருகிறது போலிருக்கிறது! ஆம். அதில் வியப்பில்லைதான்! தங்கத்தினாலும், முத்துக்களாலும், வைர வைடூரியங்களாலும், நாக சர்ப்பங்களின் சிரோரத்தினங்களாலும் ஆன விசித்திர மாட மாளிகைகள் குளிர்ந்த வெளிச்சத்தைப் பரப்புவது இயல்புதானே?

அதோ கூட்டமாக வருகிறவர்கள் யார்? அவர்களுடைய தேகங்கள் எப்படிக் காந்தி மயமாயிருக்கின்றன? முகங்களிலே தான் என்ன தேஜஸ்? இவர்களெல்லாம் தேவலோகத்து ஸ்திரீ புருஷர்களைப் போல் அல்லவா தோற்றமளிக்கிறார்கள்? நாம் வந்திருப்பது ஒரு வேளை நாகலோகமில்லையோ? தேவலோகத்துக்கு வந்துவிட்டோமோ!

பிறகு, கனவுக்குள் ஒரு கனவைப்போல சில நிகழ்ச்சிகள் அதிவேகமாக நடந்தேறின. சிங்கார அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்த மணி மண்டபம் ஒன்றுக்கு வானதியை அவர்கள் அழைத்துச் சென்றார்கள்.

மண்டபத்தில் மத்தியில் பொன்னியின் செல்வர் தமது பொன் முகத்தில் புன்னகை பொலிய நின்று வானதியை வரவேற்றார்.

தேவ துந்துபிகள் முழங்க, மணிகளும் மலர்களும் பொழிய, மங்கள கோஷங்கள் ஒலிக்க, இளவரசரும் வானதியும் மாலை மாற்றித் திருமணம் புரிந்து கொண்டார்கள். அந்த ஆனந்தத்தின் மிகுதியைத் தாங்க முடியாமல் வானதி மூர்ச்சையாகி விழுந்தாள். வெகு நேரம் நினைவின்றிக் கிடந்த பிறகு இருகரங்கள் அவளைத் தூக்கி எடுத்தன. அக்கரங்கள் பொன்னியின் செல்வருடைய திருக்கரங்கள் என்று முதலில் வானதி கருதினாள். அவர்தான் தன்னைத் தூக்கியெடுத்து, வாரி அணைத்து மடியில் போட்டுக் கொண்டு மூர்ச்சைத் தெளிவிக்கிறார் என்று எண்ணினாள்.

ஆனால், கைகளிலே வளையல் தட்டுப் பட்டதும் சிறிது ஐயம் உதித்தது. "வானதி! வானதி! இப்படிச் செய்து விட்டாயே!" என்ற குரலும் பெண்குரலாக ஒலித்தது. மிகமிகப் பிரயத்தனம் செய்து வானதி சிறிதளவு கண்ணிமைகளைத் திறந்து பார்த்தாள். குந்தவையின் முகம் அவள் கண்ணில் பட்டது.

"அக்கா! அக்கா! என் கலியாணத்துக்கு நீங்கள் வந்திருந்தீர்களா? தங்களைக் காணவில்லையே?" என்று வானதியின் வாய் முணுமுணுத்தது.

### 24ஆம் அத்தியாயம்
### நினைவு வந்தது

வானதி மீண்டும் ஒரு முறை நினைவற்ற நிலையை அடைந்தாள். அவளுடைய கண்களும் மூடிக் கொண்டன. கொஞ்சம் கொஞ்சமாகச் சுய நினைவு வரத் தொடங்கியது. நாகலோகத்திலோ, தேவலோகத்திலோ, தான் இளவரசரை மணந்தது வெறும் பிரமை என்பதை உணர்ந்தாள்.

இளவரசரைப் பற்றிய துயரமான செய்தி கேட்டதையும், அதன் பேரில் தான் ஓடைக் கரையில் வந்து நின்றதையும், தலை சுற்றி நீரில் விழுந்ததையும் நினைவுபடுத்திக் கொண்டாள். இந்த நினைவுகள் அவளுக்கு எல்லையற்ற ஏமாற்றத்தை அளித்தன. நெஞ்சில் சுருக்கென்று ஈட்டி பாய்வது போன்ற வலியையும் அளித்தன. கண்களைத் திறக்க முயன்றாள், ஆனால் முடியவில்லை. தன்னைத் தண்ணீரிலிருந்து தூக்கிக் கரை சேர்த்தது யாராயிருக்கும்? இளைய பிராட்டியாகத்தான் இருக்க வேண்டும்.

(தொடரும்)


## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

# வீண்பெருமை துன்பம் தரும்

ஒரு காட்டின் அருகில் கழுதை மேய்ந்து கொண்டிருந்தது. அருகில் இருந்த பெரிய குடிசையில் பெரிய சேவல் ஒன்று இருந்தது. அதுவும் இரைதேடி அலைந்து கொண்டிருந்தது. திடீரென்று அங்கு ஒரு சிங்கம் வந்தது. சிங்கத்தைக் கண்ட கழுதையும் சேவலும் மிரண்டு பலமாகக் கூவின.

சிங்கத்திற்கு கழுதையின் குரல் புதிதல்ல ஆனால் அச்சிங்கம் சேவலின் கூவல் கேட்டதில்லை. அதனால் அது பயந்து அங்கிருந்து திரும்பி ஓட ஆரம்பித்தது.

சிங்கம் ஓடுவதைக் கண்ட கழுதை தன் குரலைக் கேட்டுத் தான் சிங்கம் ஓடுகிறது என்று நினைத்து சிங்கத்தை துரத்தியது. சிறிது தூரம் சென்றதும் சிங்கம் திரும்பிப் பார்த்தது. கழுதை ஓடி



வருவதைக் கண்டது. அருகில் சேவலைக் காணவில்லை அதன் பயம் நீங்கியது. அது கழுதையின் மேல் பாய்ந்து அதைக் கொன்றது.

பா.நிஷாந்,
பா/இந்துக் கல்லூரி

# அதிசய உண்மைகள்

- உலகிலேயே மிக நீளமான சுரங்கப்பாதை ஐரோப்பாவில் உள்ளது.
- மனிதமூளை தான் ஆயுட்காலத்தில் பத்துக்கோடி செய்திகளைச் சேமித்து வைக்கும் திறன் கொண்டது.
- திமிங்கலத்திற்கு வாயில் சுவை நரம்பு இல்லை.
- முதன் முதலில் காகிதத்தை உருவாக்கியவர் சீனாவைச் சேர்ந்த சாய்லூன் என்ற அறிஞராவார்.
- குரங்குகள் மற்றைய பிராணிகளை விட அதிகமாக மூளை வளர்ச்சி பெற்றவை.

த.மகஸ்ரீதா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு ஒரு விஷயத்தைப் புரிய வைக்கிறது, ஆனால் அனுபவமே அதை உணர வைக்கிறது. – அறிஞர்

வலம்புரி

TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேர்தல் சார்ந்த வெறுப்பை மக்களிடம் ஏற்படுத்திவிடாதீர்கள்

ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்ப் பொது வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் என ஒரு தரப்பு அறிவித்தது.

இன்னொரு தரப்பு ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டது.

இதனிடையே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களியுங்கள் என இலங்கைத் தமிழரசுக் கட்சி கூற, இன்னும் சில கட்சிகள் ரணிலை ஆதரித்தன.

இவ்வாறாகத் தமிழ்த் தரப்புகள் பிரிந்து நிற்கையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பதினைந்து பேர் கூட்டாக ஓர் அறிக்கையை வெளியிட்டனர்.

அதில் மாற்றத்துக்காக வாக்களியுங்கள் எனத் தமிழ் மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இங்கு மாற்றம் என்பது அநுர குமார திஸாநாயக்கவுக்கு வாக்களிப்பதைக் குறிப்பதாகும்.

இவ்வாறாக கன்னை பிரிந்து நின்ற தமிழ்த் தரப்புகள் வெவ்வேறுபட்ட தீர்மானங்களை – வேண்டுகோள்களை தமிழ் மக்கள் மத்தியில் விடுத்தன.

ஜனாதிபதித் தேர்தலில் அநுர குமார திஸாநாயக்க வெற்றி பெற்ற கையோடு பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டது.

என்னே ஆச்சரியம்! யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்திலும் வன்னித் தேர்தல் மாவட்டத்திலும் அளவு கடந்த வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர்.

இதற்கு மேலாக, சமூக வலைத்தளங்களில் அவர்கள் செய்கின்ற விளம்பரங்கள், தமக்குத் தமக்கெனப் பாடல்களை இயற்றி இசையமைத்து அவற்றினூடு செய்கின்ற பிரசாரங்களை எல்லாம் பார்க்கும்போது, நிலைமை கட்டுக்கடங்காமல் சென்றுவிட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

அதேநேரம் ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ் மக்களை வழிப்படுத்துவதற்காக வெளியிடப்பட்ட அறிக்கைகள் – அடையாளப்படுத்தல்கள் எதுவும் பொதுத் தேர்தலில் இல்லாமல் போனமையும் விசித்திரமே.

எதுஎவ்வாறாயினும் தேர்தலில் அதிகளவானவர்கள் களமிறங்கி மக்கள் மத்தியில் பிரசாரம் செய்யும் போது, அஃது நம் தமிழ் மக்களிடையே தெவிட்டலை ஏற்படுத்தவே செய்யும்.

இவ்வாறான நிலைமை தமிழ் மக்களிடம் ஏற்படுமாக இருந்தால், அவர்கள் வாக்களிப்பதில் இருந்து ஒதுங்கிக் கொள்வார்கள் என்பது நிறுதிட்டமான உண்மை.

**எனவே எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது தமிழ் மக்கள் விரக்தியுற்று, வாக்களிப்பைத் தவிர்க்கின்ற நிலைமை ஏற்படாமல் பார்த்துக் கொள்வது மிக மிக அவசியம்.**

# சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 108 வாகனங்களைக் காணவில்லை

## கணக்காய்வு அறிக்கையில் தகவல்

இலங்கை சிவில் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு சொந்தமான 108 வாகனங்கள் தற்போது அங்கு இல்லை என இலங்கைத் தேசிய தணிக்கை அலுவலகம் வெளியிட்டுள்ள கணக்காய்வு அறிக்கையில் தெரியவந்துள்ளது.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்ட 128 வாகனங்கள் காணப்படும் நிலையில், அதில் 108 வாகனங்கள் தொடர்பில் எதுவித ஆதாரங்களும் தணிக்கை அலுவலகத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

இதேவேளை, சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் போக்குவரத்து மற்றும் கணக்குப் பிரிவு ஆகியவற்றில் உள்ள 444 வாகனங்களில் 82 வாகனங்கள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படவில்லை.

அவ்வாறு பதிவு செய்யப்படாத வாகனங்களின் மதிப்பு 140,135,000 ரூபாய் ஆகும்.

சிவில் பாதுகாப்பு திணைக்களம் தொடர்பாக 2023 ஆம் ஆண்டுக்கான செயல்திறன் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தணிக்கை அறிக்கையில் இந்தத் தகவல் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# அரசால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களை மீள ஒப்படையுங்கள்

## முன்னாள் அமைச்சர்களுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களை மீள ஒப்படைக்குமாறு முன்னாள் அமைச்சர்களுக்கு மீண்டும் நினைவூட்டப்பட்டுள்ளதாக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

28 அமைச்சர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவற்றில் இதுவரை 14 உத்தியோகபூர்வ இல்லங்கள் மாத்திரமே ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மின்சாரம் மற்றும் நீர்க் கட்டண நிலுவைகள் அனைத்தையும் செலுத்தியதன் பின்னரே குறித்த இல்லங்கள் மீள ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, தொடர்ந்தும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் செயற்படும் முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# யாழ்.போதனாவில் இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டைக் கருத்திற் கொண்டு விதையனைத்தும் விருட்சமே குழுமம் மற்றும் குறிஞ்சி கிறியேஷன்ஸ் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இரத்ததான முகாம் இன்று சனிக்கிழமை (19.10.2024) காலை-08.30 மணி தொடக்கம் மாலை-03.30 மணிவரை யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் இரத்த வங்கிப் பிரிவில் நடைபெறவுள்ளது.

இந்த இரத்ததான முகாம் நிகழ்வில் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-7)

# விசேட தேவையுடையோர் வாக்களிக்க ஏற்பாடு

எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின்போது விசேட தேவையுடைய வாக்காளர்களுக்கு வாக்கெடுப்பு நிலையத்தில் வைத்து வாக்குச் சீட்டினை அடையாளமிடுவதற்கு உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்ல சட்ட விதிகள் அமைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவிக்கையில்,

விசேட தேவையுடைய வாக்காளர்களின் உதவியாளர்கள் 18 வயதைப் பூர்த்தி செய்த ஒருவராக இருத்தல் வேண்டும் என்பதோடு தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் அல்லாதவராக இருத்தல் வேண்டும்.

மேலும், விசேட தேவையுடைய வாக்காளர்களின் உதவியாளர்கள், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் அதிகாரமளிக்கப்பட்ட முகவராகவோ, பிரதேச முகவராகவோ அல்லது வாக்கெடுப்பு நிலையத்தின் முகவராகவோ இருத்தல் கூடாது.

விசேட தேவையுடைய வாக்காளர்கள் தங்களது உதவியாளர்களை உடனழைத்துச் செல்வதற்குத் தகுதிச் சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த தகுதிச் சான்றிதமுக்கான விண்ணப்பங்களை மாவட்டத் தேர்தல் அலுவலகங்களில், பிரதேச செயலகங்களில்,கிராம அலுவலர் அலுவலகங்களில் அல்லது www.election.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக பெற்றுக் கொள்ள முடியும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)

# திருகோணமலையில் விருந்துபசார நிகழ்வில் தாக்குதல்; ஒருவர் பலி

திருகோணமலை- கோவிலடி பிரதேசத்தில் இடம்பெற்ற விருந்துபசார நிகழ்வொன்றின் போது ஏற்பட்ட வாக்குவாதத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

நண்பர்கள் குழுவினரால் நடத்தப்பட்ட விருந்துபசார நிகழ்வின் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் தம்பலகாமம் - கோவிலடி பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய நபர் ஒருவரே உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

# சீனப் பிரஜை கொழும்பில் கைது

கொழும்பு கொள்ளுப்பிட்டி, சமகி மாவத்தையில் சீனப் பொருட்களை விற்பனை செய்யும் கடை ஒன்றின் களஞ்சியசாலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் சீனப் பிரஜை ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை (18) கைது செய்யப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர மது வரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளின் பெறுமதி பத்தாயிரம் ரூபாய் ஆகும்.

59 வயதுடைய சீனப் பிரஜை ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

# சங்குப்பிட்டியில் விபத்து ஒருவர் படுகாயம்

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்குப்பிட்டிப் பாலத்தை அண்மித்த பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் 44 வயதுடைய நபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மேற்படி நபர் பயணித்த மோட்டார்சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து கடலுக்குள் பாய்ந்ததில் மேற்படி விபத்து சம்பவித்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்து இடம்பெற்று நீண்ட நேரமாக வீதியில் படுகாயமடைந்த நிலையில் கிடந்த நபரை அப்பகுதி மக்கள் மற்றும் பொலிஸார் மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதித்து பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7.30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் வரலாறு பற்றிய ஒரு பார்வை - பகுதி I

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

09

அன்றைய நாளை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கரிநாளாக அறிவித்து அந்நாள் பாடசாலைப் பகிஷ்கரிப்பு, கடையடைப்பு போன்றவை இடம்பெற்றன.

அன்றையதினம் தலைநகர் கொழும்பில் காடையர்கள் தமிழர்களைக் கண்ட கண்ட இடங்கள் தோறும் தாக்கியிருந்தனர். கல்லோயா குடியேற்றப்பகுதிகளிலும் இனக் கலவரம் பலத்த சேதத்தை ஏற்படுத்தியிருந்தது.

### தனிச் சிங்கள திருத்தச் சட்டமூலம்

1956/33 சட்டத்தின் மூலம் சிங்களம் மாத்திரம் அரச கருமமொழியாகப் பிரகடனம் செய்யப்பட்டது. இத்தவறைத் திருத்துவதற்கு 1958இல் மற்றுமோர் சட்டம் உருவாக்கப்பட்டது. அது 1958/28 இன் நியாயமான தமிழ்மொழி பாவனைச் சட்டமாகும். அதன் மூலம் அரச நடவடிக்கைகளை தமிழ் மொழியில் செயற்படுத்துவதற்கு சட்டங்கள் இயற்றப்பட்டன. அதன் பிரகாரம்

- அரச தமிழ் பாடசாலைகளின் போதனா மொழி தமிழாக அமைய வேண்டும்.
- தமிழர்கள் அரச சேவையில் சேர்வதற்கான பரீட்சைக்கு தமிழ் மொழியில் தோற்றலாம்.
- தமிழ் மொழி பேசும் ஒருவர் அரச நிறுவனம் ஒன்றுடன் தொடர்பு கொள்கையில் தமிழ் மொழியில் தொடர்பு கொள்ளும் உரிமை உண்டு.
- வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரச நடவடிக்கைகள் தமிழ் மொழியில் இடம்பெற வேண்டும்.

என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

1959 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25ஆம் திகதியன்று பிரதம மந்திரி எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா காவி உடை அணிந்த ஒரு மனிதனால் அன்னாரது தனிப்பட்ட இல்லமான பான்ஸ் பிளேஸ் இல்லத்தில், காவி உடை மனிதன் தனது காவி உடையில் மறைத்து வைத்திருந்த சுழல் கைத்துப்பாக்கியினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பண்டாரநாயக்கவின் கொலை இலங்கை அரசியலில் அன்று ஸ்திரமற்ற நிலையை உருவாக்கியிருந்தது. பண்டாரநாயக்கவின் அமைச்சரவையில் அமைச்சராக இருந்த விஜயானந்தத தஹ நாயக்க, பண்டாரநாயக்கவின் கொலைக்குப் பின் பிரதமரானார்.

### விஜயானந்த தஹநாயக்கபற்றி...

விஜயானந்ததஹநாயக்க பிரதமராக அலரி மாளிகைக்குள் அடியெடுத்து வைத்தபோது அதுவரையில் அவர் பார்த்திராத பிரதமரின் படுக்கை அறையைப் பார்த்துவிட்டு, பேராச்சிரியம் கொண்டார். "ஒரு மனிதர் படுத்துறங்குவதற்கு இத்தனை பெரிய அறை தேவைதானா?" நான் தனிமனிதனாக இங்கே வந்துள்ளேன். அத்துடன் பிரம்மச்சாரி வேறு. எனக்கு வேறு எந்தத் தொடர்புகளுமில்லை. படுத்துறங்குவதற்கு ஒரு சிறிய படுக்கை மாத்திரம் போதும் என்று அதிகாரிகளிடமும் அங்கிருந்த சேவகர்களிடமும் சொல்லியிருக்கிறார்.

ஆனால், அரசின் நடைமுறைகளை அவர்கள் அவருக்காக மாற்றவில்லை. படுக்க ஒரு சிறிய படுக்கை, உண்பதற்கு ஒரு தட்டம், அருந்துவதற்கு ஒரு கோப்பை, அணிவதற்கு சில உடைகள் இவை தானே தனக்குத் தேவை. இந்த மாளிகை எனக்கு எதற்கு? என்று அவர் சொன்னபோதும் நிர்ப்பந்தங்களினால் அவர் மாளிகையை ஏற்க நேர்ந்தது.

வெளிவிவகார அமைச்சராகவும் நியமிக்கப்பட்டமையால் வெளிநாட்டு தலைவர்கள், அமைச்சர்கள், உள்நாட்டிலிருக்கும் வெளிநாட்டு ராஜ தந்திரிகள் வந்து சந்திப்பதற்கு இந்த அலரி மாளிகை தான் உங்களுக்கு உகந்தது என அதிகாரிகள் வலியுறுத்தியமையால் அங்கு தங்குவதற்கு முடிவு செய்தார்.

இவர் அங்கம் வகித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்த (மக்கள் ஐக்கிய முன்னணியிலிருந்த) சில பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் இவர் பிரதமராக இருப்பதை விரும்பவில்லை. இவருக்கு இடையூறுகளைச் செய்தனர். எளிமையை விரும்பியவர், ஊழலுக்கு எதிரானவர்.

இவர் பிரதமராகவும் முக்கிய அமைச்சுகளுக்கும் பொறுப்பாகவும் இருந்தால் தங்களால் அரசியலை வைத்து பிழைக்கமுடியாது என்பது அந்த எதிர்ப்பாளர்களின் எண்ணம். அவர்களின் இடையூறுகளை பொறுக்கமாட்டாத பிரதமர் தஹநாயக்க அதிரடியாக சில அமைச்சர்களை நீக்கினார்.

அவர்களின் பதவிகளை தன்னுடன் இணைந்து பணியாற்றக் கூடியவர்களிடம் ஒப்படைத்தார். எனினும் அது நிரந்தரமாக சாத்தியமாகவில்லை. இதனால் காலம் தாமதிக்காமல் அரசை கலைத்துவிட்டு தேர்தலுக்கு நாள் குறித்தார். இலங்கையில் அதற்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தல்கள் இரண்டு அல்லது மூன்று நாட்கள் தொகுதி வாரியாக நடந்தன. அதனால் பணம் வீண் விரயமாவதை விரும்பாத தஹநாயக்க ஒரே நாளில் நாடு முழுவதற்கும் பாராளுமன்றத் தேர்தல் நடத்தும் நடைமுறையை அறிமுகப்படுத்தினார்.

அவர் பிரதமராக பதவியிலிருந்த காலம் ஓராண்டுதான். ஆனால் அந்த ஓராண்டிற்குள் இலங்கை அரசியல் வரலாற்றில் முன்மாதிரியான தலைவர் என்ற பெயரையும் புகழையும் பெற்றார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்தவர்களை அமைச்சுப்பதவியிலிருந்து அவர் நீக்கியமையால் வரவிருக்கும் தேர்தலில் இக்கட்சியின் ஆதரவு தனக்கு கிடைக்கும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. அதனால் இவர் லங்கா பிரஜாதந்திரவாதி கட்சியை (லங்கா ஜனநாயகக் கட்சியை) உருவாக்கி அதன் சார்பில் 1960 மார்ச் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார்.

தேர்தல் முடிவு வரும்வரையில் காபந்து அரசின் பிரதமராக அவர் இருந்ததால் அந்த பதவிக்குரியவரின் அரச வாசஸ்தலம் அலரி மாளிகை என்பதால் அங்கேயே குடியிருந்தார். இலங்கை வானொலி தொகுதிவாரி தேர்தல் முடிவுகளை நள்ளிரவு முதல் ஒலிபரப்பத் தொடங்கியது.

பிரதமர் தஹநாயக்க அலரி மாளிகையில் இருந்தவாறு முடிவுகளை வானொலியில் செவிமடுத்தார். அதிகாலை விடிவதற்குள் வந்திருந்த முடிவுகளின் பிரகாரம் அவரது தோல்வி நிச்சயமாகிவிட்டது.

விடிந்ததும் சபாநாயகருக்கும் மகாதேசாதிபதிக்கும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு "தனது பதவிக்காலம் முடிந்து விட்டது. நான் ஊருக்குப் புறப்படுகின்றேன். மீண்டும் கொழும்பு வரும் சந்தர்ப்பம் கிடைத்தால் உங்களை சந்திக்கின்றேன்" என்றார்.

"இன்றும் நீங்கள் தான் காபந்து அரசின் பிரதமர். தேர்தல் முடிவுகள் அனைத்தும் வெளியானதும் தேர்தல் ஆணையாளர் அறிவிக்கும் வரையில் அங்கேயே இருங்கள். "ஊருக்குச் செல்ல வேண்டாம்" என்று அவர்கள் வலியுறுத்திச் சொன்ன போதிலும் அவர்களின் வேண்டு கோளை "அலட்சியம் செய்து" இவர்கள் யார் எனக்குச் சொல்வது மக்கள் சொல்லிவிட்டார்கள். மக்கள் தான் என்னை இங்கே அனுப்பியவர்கள். "அதே மக்கள் இன்று தீர்ப்புச் சொல்லி விட்டார்கள். நான் போகிறேன்" எனச் சொன்னவர்தான் "மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு" என்று வாழ்ந்து காண்பித்த தஹநாயக்க தன்னிடமிருந்த ஒரு பழைய சிறிய சூட்கேஸினுள் தனது ஒரு சில உடைகளை மாத்திரம் எடுத்துக் கொண்டு அலரி மாளிகையில் பணியிலிருந்த சேவகர்களிடம் "மங் என்னாங் புதாலா" (நான் வருகிறேன் மகன்மாரே) எனச் சொல்லி விட்டு அந்த பிரமாண்டமான மாளிகையின் பிரதான வாயிலிலிருந்து வெளியேறி காலி வீதியை கடந்து எதிர்ப்பக்கம் சென்று கொழும்பு புறக்கோட்டைக்குச் செல்லும் இ.போ.ச. பஸ்ஸில் ஏறிச் சென்று அங்கிருந்து காலிக்குச் செல்லும் பஸ்கள் வந்து தரிக்கும் இடத்தில் நின்றார்.

லேக்ஹவுஸ், வீரகேசரி, ரைம்ஸ் ஒஃப்சிலோன் பத்திரிகை நிறுவனங்களிலிருந்து தேர்தல் முடிவுகளை வானொலியில் கேட்டு எழுதிக் கொண்டிருந்த ஊடகவியலாளர்கள், காபந்து பிரதமர் தஹநாயக்கா அடுத்து என்ன செய்யப் போகிறார்? என்பதை அறிவதற்கு அலரிமாளிகைக்கு தொடர்பு கொண்டனர்.

அங்கிருந்து கிடைத்தபதில் "மாத்தயாக மடகியா" (ஐயா ஊருக்குப் போய் விட்டார்) ஊடகவியலாளர்கள் தாமதமின்றி புறக்கோட்டை பஸ் நிலையத்திற்கு விரைந்தனர். தஹநாயக்க பஸ் நடத்துனரிடம் பணம் நீட்டி டிக்கட் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

அந்த நேரத்தில் தன்னைத் தேடி வந்த ஊடகவியலாளர் களிடம்" இனித் தான் உங்களுக்கு அதிகம் வேலை இருக்கும். எதற் காக வீணாக என்னைத் தேடி வந்தீர்கள். திருப்பிப் போய் செய்ய வேண்டிய வேலைகளை கவனியுங்கள்" எனச் சொல்லிக் கொண்டு பஸ்ஸில் ஏறி அமர்ந்தார்.

வெளியே அவரை அதிசயத்துடனும் அதிர்ச்சியுடனும் பார்த்துக் கொண்டிருந்த ஊடகவியலாளர்களிடம் "மங் என்னாங் புதாலா" (நான் வருகிறேன் மகன்மாரே) எனச் சொல்லிக் கொண்டு விடைபெற்றார். கல்விமான் எனப் பெயரெடுத்த அந்தக் கனவான். மக்களின் நன்மதிப்பும் பேராதரவும் அவருக்கு தொடர்ந்திருந்தது. மீண்டும் மீண்டும் காலி தொகுதியில் வென்று பாராளுமன்றம் வந்தார். 1989 வரையில் அவர் அங்கு வந்தார். ஆனால் காரில் அல்ல. இ.போ.ச. பஸ்ஸில் தான் வந்து திரும்பினார்.

அவர் 1960 மார்ச் தேர்தலில் தோற்றபின்னர் அதன்பின் நடந்த 1960 ஜூலை தேர்தலில் லங்கா பிரஜாதந்திரவாதி கட்சியிலும் 1965 தேர்தலில் சி.பி.டி. சில்வா தலைமையிலான சிறிலங்கா சுதந்திர சோசலிஷ் கட்சியிலும் காலித் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிணற்றுக்குள்...

தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள் ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசா ரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## அறவழியில்...

டத்தில் சுயேட்சைக் குழு - 02 இன் ஊஞ்சல் சின்னத்தில் போட்டியிடும் சட்டத்தரணி ஈ.எஸ்.பி.கமலரூபன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடகஅமையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது அரசியல் பிரவேசம் நேர்மை யாக இருக்க வேண்டும். அறவழி சார்ந்த பயணமாக இருக்க வேண்டும். சில கட்சிகளில் நேற்று கட்சியில் இணைந்தவர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளது. ஒரு விளையாட்டு வீரனாக எனக்கு அனுபவம் உண்டு, ஒரு வீரனை நீக்கி விட்டு, அந்த இடத் திற்கு புதியவர் வரும்போது, அது அவரைப் பெரிதும் பாதிக்கும்.

ஆகவே அவ்வாறான ஆசன ஒதுக் கீடு எனக்குத் தேவையில்லை. எனது அரசியல் அறவழியாக இருக்க வேண் டும் என்பதால்தான் சுயேட்சையாக இறங்கியுள்ளேன். ஒரு கட்சியின் தலைவர், அல்லது குழுவின் தலைவர் சுய ஒழுக்கத்துடன் இருக்கும்போதே அவர்களின் கீழ் உள்ளவர்களும் சுய ஒழுக்கத்துடன் இருப்பார்கள்.

தமிழர்களுக்கு வாக்களிக்காவிட் டால் அவர்கள் தமிழர்கள் இல்லை எனச் சொன்னார்கள் இதா பண்பு? இளையோரை சுயஒழுக்கங்களுடன் நல்வழிபடுத்த வேண்டும்.

அதனால்தான் அறவழி அரசியல் பயணத்திற்கு சுயேட்சைக் குழுவே எனக்கு முக்கிய தெரிவாக இருந்தது. எனது அரசியல் பயணமானது 30 வரு டங்களுக்கு மேலாக இருக்கும் என நம்புகிறேன். இரண்டு வருடங்களின் பின்னர், கட்சிகளுடன் இணைந்து செயற்படுவது தொடர்பில் முடிவெடுப் பேன்.

இந்தப் பாராளுமன்றத் தேர்தலின் போது கூட பல கட்சிகள் எனக்கு அழைப்பு விடுத்தன. வாய்ப்புக்கள் இப்படிக் கதவைத் தட்டாது எனக் கூறி னார்கள். நான் சொன்னேன் வாய்ப்புக் களை எனக்கு உருவாக்கி கொள்ளத் தெரியும் என்று.

கடந்த 2023ஆம் ஆண்டு நடை பெறவிருந்த உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட இருந்தேன். எனது இலக்கு, உள்ளூராட்சித் தேர்தலில் போட்டி யிட்டு உள்ளூராட்சி உறுப்பினரான பின்னர் மக்கள் சேவைகளைச் செய்த பின்னர் 2024 அல்லது 2025ஆம் ஆண்டு களில் பாராளுமன்றத் தேர்தல் வரும் போது அதில் மக்கள் அறிந்த வேட் பாளராகக் களமிறங்க இருந்தேன். அதுதுரதிர்ஷ்டவசமாக உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவில்லை.

இந்தத் தேர்தலில் எமக்கு இரண்டு ஆசனங்கள் கிடைக்கப்பெற்றால், சுழற்சி முறையில் ஏனையவர்களுக்கு ஆசனங்களை வழங்குவேன்.

தென்மராட்சி, வடமராட்சி, கிளி நொச்சி போன்ற தேர்தல்த் தொகுதி மக் களுக்கு ஒரு பிரதிநிதித்துவம் இல்லை. அதேபோன்று பெண்களுக்குமான பிரதிநிதித்துவம் இல்லை. அவர்களு க்கு சுழற்சி முறையில் ஆசனங்களை வழங்க முடியும்.

எமது தேர்தல் விஞ்ஞாபனம் தீபா வளி அன்று வெளியிடப்படும். அதில் முக்கியமான ஐந்தம்சக் கோரிக்கை கள் உள்ளடக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். (ம-7,33)

## செவிடாகவும்...

யிடுவது தொடர்பில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் குருடாகவும் செவி டாகவும் செயற்படுவதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ கடுமையாகச் சாடி யுள்ளார்.

தனது எக்ஸ் தளப் பக்கத்தில் இட்ட பதிவொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் மேலும் இரண்டு அறிக்கை கள் வெளியிடப்படாமல் உள்ளமை வெளிப்படைத்தன்மை பற்றிய கேள்வி களை எழுப்புகின்றன.

"ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான [illegible] அறிக்கை [illegible] அர சாங்கம் கட்டுப்பாட்டை மீறிவிட்டது.

ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையில் விடுபட்ட பக்கங்கள் இன்னும் இருப்ப தாக ஒரு கருத்து நிலவி வரும் நிலை யில், அரசாங்கம் அதனை இன்னும் கண்டுபிடிக்கவில்லை.

அரசாங்கம் அறிக்கைகளை வெளி யிடுவதில் குருடாகவும் செவிடாகவும் செயற்படுகிறது. வெறும் பேச்சு மாத் திரமே, எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை.

சந்தேகங்கள் நிறைந்திருக்கும் விட யங்களில் அரசாங்கம் பதில் சொல்வது அவசியமானதென அவரது பதிவில் அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-7)

## மின்சாரம்...

உள்ள ஐயனார் ஆலயத்தில் பாடல் ஒலிபரப்புவதற்காக மின்சார இணைப் புகளில் ஈடுபட்டபோது தவறுதலாக மின்சாரம் தாக்கியுள்ளது.

இந்நிலையில் அவரை வைத்திய சாலைக்குக் கொண்டு சென்ற வேளை அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்ட தாகத் தெரிவிக்கப் படுகிறது.

உடற்கூற்று பரிசோதனைக்காக அவரது சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலையில் வைக்கப்பட்டுள் ளது. சம்பவம் குறித்து ஊர் காவற்றுறை பொலிஸார் விசா ரணைகளை மேற் கொண்டு வருகின் றனர். (ம-7)

## செலவு...

டுள்ளார்.

பொதுத் தேர் தலுக்கான தேர் தல் பிரசார ஆரம் பத்திலிருந்து அரசியல் கட்சி கள், வேட்பாளர் கள் வாக்காளர்க ளுக்காகச் செல விடக் கூடிய அதிகபட்ச நிதி தொடர்பிலான அறிக்கை வைத் திருக்க வேண்டி யது அவசியம் எனவும் அவர் கூறியுள்ளார்.(ம-7)

## ரணி...

ஆளாக சவாலை ஏற்றவர் தான் ரணில் விக்கிரம சிங்க. அவர் அன்று சவாலை ஏற்றதால் தான் மக்கள் வாழக் கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்கவுக்கு நாட்டை ஆள் வதற்குரிய அனு பவம் குறைவு. [illegible] வழி நடத்த முடியா மல் பொருளாதாரம் மீண்டும் சரிந்தால், அந்தச் சந்தர்ப்பத்தில் ரணில் விக்கிரம சிங்கவின் தலைமைத்துவம் இந்த நாட்டுக்குத் தேவை" என்றார். (ம-7)

## கரணவாயில்...

பாஸ்கரன் உயிரிழப்புத் தொடர்பில் மரண விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## வன்னி...

யாக முன்வைக்கப்பட்டிருந்த போதி லும், தமது வேட்புமனு நிராகரிக்கப் பட்டமை சட்டத்துக்கு முரணானது என்பதால் அந்தத் தீர்மானத்தை வலுவற்றதாக்கும் ரிட் எழுத்தாணையை பிறப்பிக்குமாறும் மனுதாரர்கள் கோரி யுள்ளனர். அத்துடன், மனு மீதான விசாரணைகள் நிறைவடையும் வரை வன்னி மாவட்டத்துக்காக எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள வாக்கெடுப்பை இடைநிறுத்தும் இடைக் காலத் தடை உத்தரவைப் பிறப்பிக்கு மாறும் மனுதாரர்கள் தமது மனுவில் கோரியுள்ளனர். (ம-7)

மஹஜன சம்பத — திகதி 2024.10.18 — சீட்டிழுப்பு இலக்கம் 5629 — F 8 0 6 3 4 6
அத சம்பத — F 6 3 4 6 — சீட்டிழுப்பு இலக்கம் 204

தன நிதானய — திகதி 2024.10.18 — சீட்டிழுப்பு இலக்கம் 1659 — E 20 34 38 72 E — Double Chance 009021

மெகா பவர் — திகதி 18/10/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1977 — O 05 14 40 48 58 — Double Chance 015711

லக்கி 7 VIP — திகதி 2024.10.18 — சீட்டிழுப்பு இலக்கம் 0455 — L 6 3 5 8 0 3 L

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3871 — சீட்டிழுப்பு திகதி 18.10.2024 — V 03 15 63 79 — V 011566

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.10.18 — சீட்டிழுப்பு இலக்கம் 938 — துலாம் 03 11 45 58 துலாம் — 105850 — 14

உத்தியோகபூர்வ முடிவுகள் — 18.10.2024 — வெற்றி வாரம் 337 — Z 2 9 2 4 7 9 — 44239 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,976,016.00

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2603 — வர்ணம் இளஞ்சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 18.10.2024 — தினம் வெள்ளி — 13 21 28 71 Z — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,662,352.80

சனிதா — திகதி 2024.10.18 — வெற்றி வாரம் 4764 — 36 58 64 74 J — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,413,008.80 — 48414

சசிரி — 542 — 2024.10.18 — பச்சை — 11 21 49 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,324,240/-

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4315 — வர்ணம் கரும் நீலம் — சீட்டிழுப்பு திகதி 2024.10.18 — தினம் வெள்ளிக்கிழமை — 17 28 40 57 கடகம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,000,000.00 — 206774

ஜய — 1779 — 18.10.2024 வெள்ளி — Y 38 11 25 32 46 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 551,084,125.80

அட கோடிபதி ADA KOTIPATHI — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் 2429 — 2024.10.18 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.75,318,840.00 — 05 61 66 73 T — 947243

DLB DEVELOPMENT LOTTERIES BOARD

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் உரும்பிராய் சிவகுல வீதியில் 24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- உரும்பிராய் மருதனார்மடம் செல்லும் காப்பெற் வீதி 150 மீற்றர் தூரம்.
- நல்ல சூழல் குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- தரகர் தேவையில்லை.

(2351)

தொடர்புகளுக்கு :

**077 468 3354**
**077 288 0152**

# Technicians தேவை

கொழும்பில் இயங்கிவரும் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் கேபிள் டிவி/ dish antenna service மற்றும் விற்பனை செய்யும் கடைக்கு dish antenna பிட்டிங் மற்றும் repair செய்யக்கூடிய technicians தேவை. திறமைக்கு ஏற்ப உணவு, தங்குமிடம் + Rs.60,000/= + மேலதிக கொடுப்பனவுகள் சம்பளமாக கிடைக்கும், டிரைவிங் லைசென்ஸ் இருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்.

(443)

**ராஜன் 0777 710 785**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

# Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 237/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg றவை | - 284/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 280/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 395/= | |
| 1Kg சம்பா அரிசி | - 228/= | |
| 1Kg கீரி சம்பா | - 250/= | |
| 1Kg உளுத்தம் பருப்பு | - 785/= | |
| 1Kg பயறு | - 655/= | |
| 1Kg மல்லி | - 380/= | |
| 1Kg சோயா | - 440/= | |
| 10Kg விஜிதா குத்தரிசி | - 2530/= | |
| 750 ml *Vsp* நல்லெண்ணை | - 1460/= | ~~1550/=~~ |
| 400 g சஸ்ரயன் | - 3500/= | ~~3900/=~~ |
| 180 ml *Chik* சம்போ | - 420/= | ~~480/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= | ~~80/=~~ |

**400g Anchor**

**1000/=**



~~1050/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

(444)

Happy Supermarket **0777 8080 30**

# சிறுநீரகம் தேவை

அவசரமாக $A^+$ வகை குருதியுடைய சிறுநீரகம் தேவைப்படுகிறது. வயது எல்லை 25 - 40

தொடர்புகளுக்கு :

**077 041 6405**

Whatsapp

**0031617990096**(கொலன்ற்)

(2333)

# யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள் 35,000/= இலிருந்து விசேட விலையில் ஒதுக்கிடம் பெற்றுக்கொள்ளலாம். ஒரு வருட E-Visa இனை 10,000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(445)

**APEX TRAVELS**

**0777 597 598, 076 3333 644**

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)




# தேவை

நாற்று நடுகைக்கு **கற்றாழைக் கன்றுகள் (ALOE VERA PLANT)** தேவை.


தொடர்புகளுக்கு :

**077 351 8213**

(2330)

# மரண அறிவித்தல்

## திரு. சுப்பிரமணியம் வீரசிங்கம்
### (ஓய்வு நிலை அதிபர்)



பிறப்பு 31.01.1945 இறப்பு 17.10.2024

புங்குடுதீவு 01ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 02ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் இல. 10 கோணாவளை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சுப்பிரமணியம் வீரசிங்கம் (ஓய்வுநிலை அதிபர்) அவர்கள் 17.10.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - தனலெட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பு - முத்தம்மா தம்பதியரின் அருமை மருமகனும் வரதலெட்சுமி(ஓய்வு நிலை ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் கிருஷாந்தன்(வைத்திய கலாநிதி யாழ்.போதனா வைத்தியசாலை), தனுஜியா(முகாமைத்துவ உத்தியோகத்தர்- விவசாயத் திணைக்களம், திருநெல்வேலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தாருணி(விரிவுரையாளர்- யாழ்.பல்கலைக்கழகம்), யோகச்சந்திரா (முகாமையாளர்-கொமர்ஷல் வங்கி, வவுனியா) ஆகியோரின் அருமை மாமனாரும் அபினவ், அகரன், சரன்ஷன், நோஷிதா ஆகியோரின் அன்புப் பேரனாரும் மற்றும் காலஞ்சென்ற சர்வானந்தன்(F.A), அகிலேஸ்வரி(ஓய்வு பெற்ற ஆசிரியை), பிறேமாவதி (ஓய்வு பெற்ற ஆசிரியை) ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்ற தர்மலிங்கம், அன்னலெட்சுமி (ஓய்வு நிலை ஆசிரியை), கனகலிங்கம்(F.A), சண்முகலிங்கம்(வைத்திய கலாநிதி U.K) ஆகியோரின் மைத்துனரும் பிரியா, ரமேஸ், மிருனாளினி ஆகியோரின் சித்தப்பாவும் மயூரன், சுரேகா, சுவாதிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (20.10.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 10, கோணாவளை வீதி (மருத்துவபீடம் முன்பாக), கொக்குவில்.

(2340)

077 3640 579
077 9112 953

தகவல்: குடும்பத்தினர்




Event Management By - Ceylon Art Creation (CAC) - 075 948 8262

SPONSORS: Hari Air Travel, IDMNC INTERNATIONAL, கிருபா, Ruby Jewellery, SR

official sponsors: Ceylon Art Creation, தினக்குரல், IBC தமிழ், saravana ADVERTISING, தேஜஸ்

| VVIP 3000 | VIP 2000 | SILVER 1000 |
|---|---|---|

அனுமதிச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள

| HARI AIR TRAVEL | JDMNC INTERNATIONAL | RUBY JEWELLERY |
|---|---|---|
| யாழ்ப்பாணம். | 839.ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். | 227.கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். |
| 021 222 9294 | 021 222 9901 | 021 221 6919 |

(C-1416)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.